தமிழ் Mirror
www.tamilmirror.lk
FRIDAY, SEPTEMBER 9, 2022
வெள்ளிக்கிழமை 9 செப்டெம்பர்,2022 | ஒளி: 08 கதிர் 096 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

## வருகிறார் சமந்தா



அமெரிக்க உதவி திட்டத்தின் தலைமை அதிகாரி சமந்தா பவர் சனிக்கிழமை (10) இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமாக அவர் இலங்கை வருகின்றார். அவரது இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள உள்ளார்.

தொடர்ச்சி P2

# ‘விமர்சிக்கும் அருகதை சாணக்கியனுக்கு கிடையாது’



எமது தவறுகளைத் தட்டிக்கேட்கும் உரிமை எமக்கு வாக்களித்த மக்களுக்கு மாத்திரம் இருக்கிறதே தவிர, சந்தர்ப்பவாத அரசியல் நடத்தும் சாணக்கியன் போன்றவர்களுக்கு எந்தவோர் அருகதையும் கிடையாதென முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தான் சபையில் இல்லாத சமயத்தில் தன்னைப்பற்றி அவதூறாகப் பேசிய

தொடர்ச்சி P2



புதிய இராஜாங்க அமைச்சர்களில்

# ஒரு ராஜபக்ஷ உட்பட 36 பேருக்கு பதவி

**பிள்ளையான், வியாழேந்திரனுக்கு பதவி**

**அரவிந்தகுமார் வசமானது கல்வி இராஜாங்கம்**

**மஸ்தானுக்கும் சுரேன் ராகவனுக்கும் பதவி**

**சஜித் அணியிலிருந்து விலகிய டயனாவுக்கும் பதவி**

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றுக்கொண்டதன் பின்னர், சர்வகட்சி அரசாங்கம், இல்லை, இல்லை தேசிய அரசாங்கம் என்றெல்லாம் கதைகள் அடிப்பட்டுக்கொண்டிருக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் சகல கட்சிகளுக்கும் பலமுறை அழைப்பு விடுத்திருந்தார். பல சுற்றுப்பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றன. என்றாலும், நீண்ட இழுபறிகள், பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் இராஜாங்க அமைச்சர்களாக 37 பேர் நேற்று (08) நியமிக்கப்பட்டனர்.

இந்தப் பதவிப்பிரமாண வைபவம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னிலையில், ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (08) நடைபெற்றது. அதில், பிரதமர் தினேஷ் குணவர்தனவும் பங்கேற்றிருந்தார்.

தொடர்ச்சி P2

## இராஜினாமா செய்வதாக சொன்னவருக்கும் பதவி



போராட்டம் உக்கிரமடைந்த நிலையில், நாட்டை விட்டு தப்பியோடி, , மாலைத்தீவு, சிங்கபூருக்கு தப்பியோடி ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்துவிட்டு தாய்லாந்தில் தஞ்சமடைந்து நாடு திரும்பிய கோட்டாபய ராஜபக்ஷவுக்காக பதவியைத் துறப்பேன் எனக் கூறியவரும், நேற்று (08) இராஜாங்க அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

தொடர்ச்சி P2



நாட்டுக்கு பாதிப்பு என்பதால்

## ஐ.எம்.எப் ஒப்பந்தத்தை அரசாங்கம் மறைக்கிறது

■ பா.நிரோஸ்

நாட்டு மக்களுக்கும், நாட்டின் பொருளாதாரத்துக்கும் பாரியளவில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணங்கள் இருப்பதாலேயே சர்வதேச நாணய நிதியத்துடனான பணியாளர் மட்ட ஒப்பந்தத்தை அரசாங்கம் வெளிப்படுத்தாது மறைத்து வருவதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பொருளாதாரம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு எதிராக இந்த ஒப்பந்தம் இருப்பதாலேயே அதனை மறைப்பதாகவும் அநுர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

நீதிமன்ற அவமதிப்பு விவகாரம்

## புதிய இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு நோட்டீஸ்

**செப்டெம்பர் 13இல் பரிசீலனை**

நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சராக நேற்று (08) முற்பகல் பதவியேற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவை எதிர்வரும் 13ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு, மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (08) நோட்டீஸ் பிறப்பித்தது.

தொடர்ச்சி P2

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிலிருந்து

## தொலைபேசியூடாக அச்சுறுத்தல்



■ எல்.ரி.யுதாஜித்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இடம்பெறும் தருவாயில் கூட அரசாங்கத்தின் அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் எல்லையில்லாமல் தொடருகின்றன என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உப தலைவர் என்.நகுலேஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## நடிகை தமிதாவுக்கு விளக்கமறியல்

பிரபல சிங்கள நடிகையும் காலிமுகத்திடல் போராட்டத் தளத்தின் உறுப்பினருமான தமிதா அபேரத்னவை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே, நேற்று (08) உத்தரவிட்டார். நீதிமன்றத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்திய சம்பவம் தொடர்பில் பிணையில் விடுவிக்கப்பட்டு இருந்த நிலையில் அவர், பிணைச் சட்டத்தை மீறியுள்ளதாகத் தெரிவித்த நீதவான் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## மறைமுக வரிகளை அறவிட சூழ்ச்சி



சமூக பாதுகாப்பு வரி என்ற பெயரில் வற் வரியுடன் மேலும் மறைமுக வரிகளை அறவிடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா பாராளுமன்றத்தில் நேற்று (8) தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஜோன்ஸ்டனுக்கு எதிராக மற்றுமொரு வழக்கு



**அதிகுற்றப் பத்திரம் பகிரப்பட்டு பிணை**

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன முன்னிலையில், நேற்று (08) அதி குற்றப்பத்திரம் பகிரப்பட்டது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவினால் கடந்த ஓகஸ்ட் 30ஆம் திகதி அதி குற்றப்பத்திரம் பகிரப்பட்ட நிலையில்,

தொடர்ச்சி P2



## அரசு பொறிமுறை மீது எனக்கு நம்பிக்கை இல்லை

**சர்வதேச சமூகத்துக்கு மனோ தெரிவிப்பு**

பின்தங்கிய நிர்க்கதியான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரசு பொறிமுறை மீது எனக்கு நம்பிக்கை இல்லை. நிவாரணம் பெறுவோரை தெரிவு செய்வதில் பிரதேச செயலக, கிராம சேவகர் மட்ட அரசாங்க அதிகாரிகள் அரசியல் நோக்கிலும், இனவாத நோக்கில் செயற்படுகின்றனர்.

தொடர்ச்சி P2

## சீமெந்து, கம்பிக்கு நிர்ணய விலை

கட்டுமானத் தொழில் துறையில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலை உயர்வுகளை அடுத்து, சீமெந்து மற்றும் கம்பி போன்ற முக்கிய பொருட்களுக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிப்பது தொடர்பான பரிசீலனையை நுகர்வோர் விவகார அதிகாரசபை மேற்கொண்டு வருவதாக அறியமுடிகிறது.

தொடர்ச்சி P2



## கடல்வாழ் உயிரினங்கள் இறந்து ஒதுங்குவதால் மக்கள் பேரச்சம்

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு - வாகரை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வட்டுவான் ஆற்றில் கடந்த இரு நாட்களாக மீன்கள், இறால்கள், நண்டுகள் மற்றும் பாம்புகள் உட்பட பல கடல்வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன.

இறால் பண்ணையின் நச்சுத்தன்னைமை கொண்ட கழிவு நீர் இந்த ஆற்றில் கலந்ததால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாகவும்

தொடர்ச்சி P2

## சின்னத் தேர்தலை தாமதிக்க வேண்டாம்

**பிரதமருக்கு பஃப்ரல் கடிதம்**

மாகாண சபைத் தேர்தலைப் போன்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் தாமதப்படுத்தக் கூடாது என்று, சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பஃப்ரல்) தெரிவித்துள்ளது. பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு எழுதிய கடிதத்திலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை பஃப்ரல் சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்ச்சி P2

## அந்நிய செலாவணி கையிருப்பு வீழ்ச்சி

இந்த வருடத்தின் ஓகஸ்ட் மாதத்தில் இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு 1.716 பில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

ஜூலை மாதத்தில் 1.817 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த அந்நிய செலாவணி கையிருப்பு ஓகஸ்ட் மாதத்தில் குறைவடைந்துள்ளமை மத்திய வங்கி தரவுகள் மூலம் தெரியவருகிறது. இலங்கையின் மொத்த அந்நிய செலாவணி கையிருப்பானது, இந்த வருடம் மார்ச் மாதம் முதல் 1.9 முதல் 1.8 பில்லியன் டொவர்களுக்கு இடையில் ஏற்ற இறக்கங்களுடன் காணப்படுகிறது.

தொடர்ச்சி P2

பாதி இலங்கையர்களுக்கு

## விட்டமின் டி குறைபாடு

இலங்கையின் சனத்தொகையில் சுமார் 50 சதவீதமானவர்களுக்கு விட்டமின் டி குறைபாடு காணப்படுவதாக களுபோவில போதனா வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் நிரஞ்சலா மிகொட விதான தெரிவித்தார்.

விட்டமின் டி குறைபாடு காரணமாக மக்கள் பல்வேறு நோய்கள் மற்றும் துன்பங்களுக்கு உள்ளாவதாக வைத்தியர் சுட்டிக்காட்டினார். சூரிய ஒளி மூலம் மக்கள் தங்களுக்குத் தேவையான விட்டமின் டியைப் பெற முடியும் என்றும்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ‘எம்மை விமர்சிக்கும்...

பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனின் குற்றச்சாட்டுத் தொடர்பில் கருத்துக் கூறுகையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது, கொழும்பு இரவுவிடுதிகளில் சாணக்கியன் கும்மாளமடித்துக் கொண்டிருந்த காலங்களிலேயே நாங்கள் தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்திகளையும் தமிழ் மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றும் பணிகளையும் செய்யத் தொடங்கிவிட்டோம். அப்பொழுதெல்லாம் இரவுவிடுதிகளுக்குள் முடங்கிக் கிடந்த தம்பி சாணக்கியன், இப்போது தன் சுயநல அரசியலுக்காக எம்மை விசர்சிக்கத் தொடங்கியிருக்கிறார். மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலைகள், மருத்துவமனைகள், வீட்டுத்திட்டங்கள், வேலைவாய்ப்புகள், விளையாட்டுக் கழகங்கள் என பல உதவிகளைச் செய்திருக்கிறோம். இவற்றில் பலவற்றை அப்பிரதேச பாராளுமன்ற உறுப்பினரான சாணக்கியன் நேரில் பார்த்தே இருக்கமாட்டார். அப்படிப்பட்ட சுயநல அரசியல்வாதிக்கு எம்மைப்போன்ற மக்கள் சேவகர்களை விமர்சிக்கும் எந்தவோர் அருகதையும் கிடையவே கிடையாது.

பிள்ளையான் என்பவர் அன்றுதொடக்கம் இன்றுவரை தான் கொண்ட கொள்கையில் மாற்றமின்றி, கட்சித் தாவலின்றி எம்மோடு தொடர்ந்து பயணித்து வருகிறார். அவரது கட்சி நிகழ்வில் நாம் கலந்துகொள்வது தார்மீகக் கடமையும்கூட. நிலமை அப்படியிருக்கையில், அலரி மாளிகைக்கு அடிக்கடி வந்து எம்மோடு தேநீர் அருந்துவதும், நிலையான அரசியல் கொள்கையின்றி கட்சித்தாவி சுயநலத்துக்காக தமிழ் மக்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்துவதையும் பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கிறது.

## இராஜினாமா செய்வதாக...

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பாராளுமன்றத்துக்குள் வருவதற்கு தயாராக இருந்தால், தான் தனது தேசியப் பட்டியல் எம்.பி பதவியை துறப்பேன் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நியமன எம்.பியான சீதா அரம்பேபொல தெரிவித்திருந்தார். எனினும், நேற்று (08) அவர், சுகாதார இராஜாங்க அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

## ஐ.எம்.எப் ஒப்பந்தத்தை...

சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட ஒப்பந்தம் செய்துக்கொள்ள ப்பட்டுள்ளதாக அரசாங்கமும், ஐ.எம்.எப்பும் அறிவித்துள்ளன. எனவே இந்த ஒப்பந்தமானது நாட்டின் பொதுமக்கள் மீது நேரடியாகவே தாக்கல் செலுத்தும் என்பதால், இந்த ஒப்பந்தத்தை அறிந்துக்கொள்வதற்கான உரிமை மக்களுக்கு இருப்பதாகவும் தெரிவித்தார்.

எனவே, இந்த ஒப்பந்தம் தொடர்பில் தெரிந்துக்கொள்வதற்கான அதிகாரத்தை பாராளுமன்றம் கொண்டுள்ளது. பசில் நிதி அமைச்சராக இருந்தபோது கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டில், அப்போது எதிர்க்கட்சி எம்.பியாக கலந்துகொண்டிருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐ.எம்.எப் அறிக்கை தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தார் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களின் நாட்டின் உண்மையான பொருளாதார நிலைமையை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர், முன்னாள் அமைச்சர்கள் நாட்டு மக்களுக்கு அறிவிக்காது மறைத்தனர். இப்போதைய பொருளாதார நெருக்கடிக்கு இதுவும் ஒரு காரணமாகும் என்றார்.

## சீமெந்து, கம்பிக்கு...

பொருளாதார ஸ்திரமின்மைக்கு மத்தியில் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான வழிகளைக் கண்டறிந்து உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு வர்த்தக அமைச்சருக்கு ஜனாதிபதி விடுத்த பணிப்புரைக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சந்தையில் விலைகள் வேகமாக அதிகரித்து வருவதால் கட்டுமானத் துறையில் பல பொருட்களுக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிப்பதற்கும் அதிகாரசபை ஆராய்ந்து வருகிறது.

2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2022 ஜூன் வரை அரச மற்றும் தனியார் விநியோகஸ்தர்களால் விற்பனை செய்யப்படும் 50 கிலோகிராம் சிமெந்து மூடையின் சராசரி விலை 187 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை 98 சதவீதம் அதிகரித்துள்ளதாக கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.

## அரசு பொறிமுறை மீது...

உண்மையான நிர்க்கதியான மக்களுக்கு, இந்திய அரசு, தமிழக அரசு, உலக நாடுகள், ஐநா அமைப்புகள் கொடையாக வழங்கும் நிவாரணங்கள் முறையாக கிடைப்பதில்லை. எனவே நிவாரண நன்கொடைகள் நேரடியாக நிர்க்கதியான மக்களை சென்று அடைவதை உறுதிப்படுத்த அவற்றை சிவில் அமைப்புகள் மூலமாக சர்வதேச சமூகம் வழங்க வேண்டும். அவை கண்காணிக்கப்பட வேண்டும். நிவாரணம் பெறுகின்றவர்கள் யார் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி முன்வைத்த இடைக்கால பாதீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகள் நடைமுறை சாத்தியம் அற்றவை. கணிசமான யோசனைகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் இல்லை. துண்டு விழும் தொகையை ஒருபோதும் நிதியமைச்சர் ஜனாதிபதியால் சரி செய்ய முடியாது. ஏற்கனவே அரச கஜானா காலி. ஆகவே எங்கே இருந்து நிதி வரப்போகிறது என்று கேட்க விரும்புகிறேன். ஏற்கனவே, சமுர்த்தி மற்றும் பின்தங்கியோர் பட்டியலில் இருக்கின்ற பெயர்கள் தொடர்பில் எனக்கு திருப்தி இல்லை. அங்கே நிவாரணம் பெற தகைமையற்ற வசதியானோர் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. நிவாரணம் பெற வேண்டிய நிர்க்கதியான மக்களின் பெயர்கள் இடம்பெறவில்லை. இதை நான் பொறுப்புடன் கூறுகிறேன். இதற்கு காரணம் அரசியல்வாதிகள் தங்கள் ஆதரவாளர் பெயர்களை அங்கே திணித்துள்ளார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# ஒரு ராஜபக்ஷ உட்பட 36 பேருக்கு பதவி

இந்த அமைச்சரவையில், ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்தவர்களில் ஒருவரான சஷீந்திர ராஜபக்ஷ, நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். ரஞ்சித் சியம்பலாபிட்டிய, சேஷான சேமசிங்க ஆகிய இருவரும் நிதி இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், அருந்திக்க பெர்ணான்டோ மற்றும் தேனுக விதானகமகே ஆகிய இருவரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலரும் இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தை மையப்படுத்தியும் இராஜாங்க அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கை பொறுத்தவரையில், காதர் மஸ்தான் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சராகவும் கலாநிதி சுரேன் ராகவன் உயர் கல்வி இராஜாங்க அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவனேசதுறை சந்திரகாந்தன், கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகவும், எஸ்.வியாழேந்திரன், வர்த்தக இராஜாங்க அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மலையகத்தை பொறுத்தவரையில், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்த குமார் கல்வி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகிய, டயனா கமகே, சுற்றுலாத் துறை இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### இராஜாங்க அமைச்சர்களின் விபரம்...

1 ஜகத் புஷ்பகுமார- வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு
2 ரஞ்சித் சியம்பலாபிட்டிய - நிதி
3 லசந்த அலகியவண்ண - போக்குவரத்து
4 திலும் அமுனுகம -முதலீட்டு ஊக்குவிப்பு
5 கனக ஹேரத் -தொழில்நுட்பம்
6 ஜனக்க வக்கும்புர - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
7 ஷெஹான் சேமசிங்க- நிதி
8 மொஹான் பிரியதர்சன டி சில்வா -விவசாயம்
9 தேனுக விதானகமகே -நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு
10 பிரமித்த பண்டார தென்னகோன்-பாதுகாப்பு
11 ரோஹண திசாநாயக்க -விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம்
12 அருந்திக்க பெர்ணான்டோ -நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு
13 விஜித்த பேருகொட - பிரிவேனா கல்வி
14 லொஹான் ரத்வத்தை -பெருந்தோட்டக் கைத்தொழில்
15 தராக்க பாலசூரிய - வெளிவிவகாரம்
16 இந்திக்க அனுருத்த - மின்வலு, எரிசக்தி
17 சனத் நிசாந்த -நீர் வழங்கல்
18 சிறிபால கம்லத் -நெடுஞ்சாலைகள்
19 சாந்த பண்டார - வெகுஜன ஊடகம்
20 அநுராத ஜெயரத்ன- நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு
21 எஸ்.வியாழேந்திரன்- வர்த்தகம்
22 சிசிர ஜெயக்கொடி -சுதேச மருத்துவம்
23 பியல் நிசாந்த டி சில்வா -மீன்பிடி
24 பிரசன்ன ரணவீர - சிறு மற்றும் மத்திய தொழில் முயற்சி
25 டீ.வி சானக்க - வனஜீவராசிகள், வனவளப் பாதுகாப்பு
26 டீ.பி.ஹேரத்- கால்நடை அபிவிருத்தி
27 சஷீந்திர ராஜபக்ஷ, - நீர்ப்பாசனம்
28 மருத்துவர் சீதா அரம்பேபொல -சுகாதாரம்
29 காதர் மஸ்தான் -கிராமிய பொருளாதாரம்
30 அசோக்க பிரியந்த -உள்நாட்டலுவல்கள்
31 கீதா குமாரசிங்க - மகளிர் மற்றும் சிறுவர் விவகாரம்
33 சிவநேசத்துரை சந்திரகாந்தன் -கிராமிய வீதி அபிவிருத்தி
34 கலாநிதி சுரேன் ராகவன் -உயர் கல்வி
35 டயனா கமகே -சுற்றுலாத் துறை
36 சாமர சம்பத் தஸநாயக்க -ஆரம்பக் கைத்தொழில்
37 அனுப பியும் பஸ்குவால் - சமூக வலுவூட்டல்

## வருகிறார் சமந்தா

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகின்ற நிலையில், இலங்கையின் மனித உரிமைகள் குறித்த முன்நகர்வுகள், இலங்கையின் நிதி நெருக்கடி நிலைமைகள் மற்றும் ஐ.எம்.எப் ஒத்துழைப்புகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடுவார் என தெரிவிக்கப்படுகின்றது.

## புதிய இராஜாங்க அமைச்சர் சனத்...

சனத் நிஷாந்தவை தண்டிக்க உத்தரவிடுமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களையும், அன்றைய தினத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்கும் நீதிமன்றம் தீர்மானித்தது.

நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஆர். குருசிங்க ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனுக்கள் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டதுடன், பரிசீலனைக்கு திகதி குறிக்கப்பட்டது.

சட்டத்தரணி பியல் சிறிசேன மற்றும் பொலன்னறுவை சட்டத்தரணிகள் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி விஜித குமார ஆகியோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சட்டமா அதிபர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த ஆகியோர் மனுக்களில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

2022 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 23 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த காலப்பகுதியில், பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய சனத் நிஷாந்த, இலங்கையின் நீதித்துறை தொடர்பாக, குறிப்பாக நீதித்துறை அதிகாரிகள் தொடர்பில் சில கருத்துக்களை வெளியிட்டதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 105(3) சரத்தின் பிரகாரம் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக சனத் நிஷாந்த எம்.பியை தண்டிக்க உத்தரவிடுமாறு மனுதாரர்கள், கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மறைமுக வரிகளை...

மறைமுக வரிகளை நீக்கி நேரடி வரிகளை அறவிடும் நோக்கிலேயே இதனை கொண்டு வருவதாக அரசாங்கத்தில் உள்ளவர்கள் கூறினாலும், இது மறைமுக வரியாகவே வரவுள்ளது. அத்துடன் இது சமூக பாதுகாப்புக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் என்றும், அரசாங்கத்தின் செலவுகளுக்கு இந்த வரிகள் பயன்படுத்தப்படாது என்றும் அரசாங்கம் உறுதிமொழியை வழங்க வேண்டியது அவசியமாகும்.

முன்னர் 8 சதவீத வரி இருந்தது. இதனுடன் இணைத்தே 2.5 சதவீத வரியை இணைக்க தீர்மானிக்கப்பட்டது. அது தொடர்பில் அன்றே நாங்கள் விமர்சனங்களை முன்வைத்தோம். இந்த வரியை 2.5 சதவீதம் என்று கூறினாலும் 5 சதவீதமாவது அறவிடப்படும் என்றோம். இதனால் இதுவொரு குழப்பமான வரியே. இந்நிலையில் 8 சதவீதத்தில் இருந்த வற்வரி 12 சதவீதமாகி, பின்னர் 15 சதவீதமாகியது. இதனை தொடர்ந்து மீண்டும் 5 சதவீதம் அல்லது 7 சதவீதத்தால் அதிகரிக்க அரசாங்கம் திட்டமிடப்படுகின்றது என்றார்.

## நடிகை தமிதாவுக்கு...

பத்தரமுல்லை பொல்துவ சந்தியில் நேற்று முன்தினம் (07) கண்டன சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்த போது தமிதா அபேரத்ன கைது செய்யப்பட்டார்.

கடந்த ஜூலை மாதம் 14 ஆம் திகதியன்று அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி நடத்தப்பட்ட மக்கள் எதிர்ப்பின் போது ஜனாதிபதி செயலகத்துக்குள் அத்துமீறி பிரவேசித்தாக கொம்பனித் தெரு பொலிஸாரால் அவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட அவரை, கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (08) ஆஜர்படுத்திய போது, தனது சேவை பெறுனருக்கு எந்த நிபந்தனையிலும் பிணை வழங்குமாறு தமிதா சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதியின் சட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்ன, மன்றில் கோரினார்.

## தொலைபேசியூடாக...

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் இருந்து தொலைபேசி அழைப்பினூடாக அச்சுறுத்தல் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், “பயங்கரவாதத் தடுப்பு பிரிவில் இருந்து கதைப்பதாக ஒரு தொலைபேசி அழைப்பு நேற்று முன்தினம் (07) பிற்பகல் 02.40 மணியளவில் வந்தது. எங்கள் ஜனநாயகப் பேராளிகள் கட்சி தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கட்சியின் தலைவர், செயலாளரின் விவரங்களைத் தருமாறும் கேட்கப்பட்டது.

“அப்போது நான் அழைப்பெடுத்தவர் தொடர்பில் கேட்கையில், அதை சொல்ல வேண்டிய அவசியமில்லை என உரத்த தொனியில் கூறப்பட்டது. அத்துடன், எங்கள் கட்சியின் தலைவர், செயலாளரின் தொடர்பிலக்கங்களை தருமாறு கூறப்பட்டது. “தொலைபேசி உரையாடலின் பண்பினை அவர் காட்டாவிட்டாலும் எங்கள் கட்சிக்கும், எமக்கும் உரித்தான பண்பின் அடிப்படையில் எங்கள் மடியில் எவ்வித கனமும் இல்லாத காரணத்தால் கட்சியின் தலைவர், செயலாளரின் தொடர்பிலக்கங்களைத் தருவதாகத் தெரிவித்தேன்.

“அதன் பிற்பாடு அவர்களின் பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை விவரம் என்பன கேட்கப்பட்டன. அதற்கு அவைகளெல்லாம் என்னிடம் இல்லை தொலைபேசி இலக்கங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் ஊடாகத் தொடர்புகொண்டு அவர்களிடமே பெற்றுக் கொள்ளுங்கள் என்று தெரிவித்தேன்.

## ஜோன்ஸ்டனுக்கு எதிராக...

குறித்த மூவருக்கும் எதிராக மற்றொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த வழக்கு நேற்று (08) எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பிரதிவாதிகள் மூவரையும் 25,000 ரூபாய் பெறுமதியான ரொக்கப் பிணை மற்றும் தலா 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி, வழக்கின் சாட்சிய விசாரணைக்கான தினமாக ஒக்டோபர் 21ஆம் திகதியை நிர்ணயித்தார். மேலும், முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, லங்கா சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் எராஜ் பெர்னாண்டோ மற்றும் ஜோன்ஸ்டனின் பிரத்தியேக செயலாளர் ராஜ் மொஹிதீன் மொஹமட் சக்கீர் ஆகியோருக்கு நீதிபதி முன்னிலையில் அதி குற்றப்பத்திரம் பகிரப்பட்டது.

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில், சதொச நிறுவனத்தின் ஊழியர்களை அரசியல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தியதன் மூலம் அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலஞ்ச சட்டத்தின் கீழ் மூவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## கடல்வாழ் உயிரினங்கள் இறந்து...

இதற்கு நீதி வேண்டுமெனவும் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் க.கருணேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடல்வாழ் உயிரினங்கள் செவ்வாய்கிழமை (06) திகதி அதிகாலை தொடக்கமே மர்மமான முறையில் திடீரென இறந்து கரையொதுங்கி வருகின்றன.

இது தொடர்பாக பிரதேச செயலகத்துக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து, அந்த அதிகாரிகள் உயிரிழந்த மீன்களை பரிசோதனைக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்த பிரதேச அதிகாரிகளின் பரிசோதனையில் எமக்கு நம்பிக்கையில்லை. இந்த சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளோம். இந்த ஆற்றில் இவ்வாறு ஒருபோதும் மீன்கள் இறந்து கரையொதுங்கியது இல்லை எனவும் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் தெரிவித்தார்.

## சின்னத் தேர்தலை தாமதிக்க வேண்டாம்

தேர்தல் முறை மற்றும் சட்டங்களைத் திருத்துவதற்கு அனைத்து கட்சிகளினதும் கருத்துக்களைப் பெறுவதற்கான தெரிவுக்குழுவை நியமிப்பதற்கான பிரதமரின் தீர்மானத்துக்கு பாராட்டு தெரிவித்துள்ளது.

அனைத்து தரப்பினரும் அறிக்கையில் கையெழுத்திடாத நிலையில், வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் உள்ளடக்கம் பாராட்டுக்குரியது என்று பஃப்ரல் குறிப்பிட்டுள்ளது. எனினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான சில முன்மொழிவுகள் பிரதிநிதிகளின் ஜனநாயகத்தின் அடிப்படை சாரத்துக்கு எதிரானவை என்றும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெரும்பான்மையைப் பெறும் கட்சிக்கு போனஸ் ஆசனங்களை வழங்குவது மற்றும் மேலெழுந்தவாரியான ஆசனங்களை அகற்றுவது உள்ளிட்ட சில முன்மொழிவுகளுக்கு உடன்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

## அந்நிய செலாவணி...

முந்தைய கையிருப்புகள் தீர்ந்துள்ள நிலையில், மீதமுள்ள மொத்த கையிருப்புகளில் பெரும்பாலானவை சீன மக்கள் வங்கியின் இடமாற்று வரியிலிருந்து பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## விட்டமின் டி குறைபாடு

இது மிகவும் எளிமையான மற்றும் மலிவான வழி என்றும் குறிப்பிட்டார். சராசரியாக நபரொருவர், ஒரு நாளைக்கு அரை மணி நேரம் வீதம் வாரத்தில் மூன்று நாட்கள் சூரிய ஒளியை பெற்றுக்கொள்வது அவசியம் என்றும் தெரிவித்தார்.






பா. நிரோஸ்
ddnirosh@gmail.com


# இராஜாங்க அமைச்சர்களின் நியமனங்கள் நியாயமானது

தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர்களின் நியமனங்கள் நியாயமானது எனவும், அவர்கள் எவருக்கும் இராஜாங்க அமைச்சர்களுக்கான சிறப்புரிமைகள் வழங்கப்படாது எனவும், அவர்கள் எம்.பிக்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தின் கீழேயே பணியாற்றுவர் என்றும் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்றமை தொடர்பில், மக்கள் அதிருப்தியடைவார்கள். எவ்வாறாயினும் அமைச்சுப் பதவிகளை அதிகரிப்பது என்பது நியாயமானதே. இந்நிலையில் இராஜாங்க அமைச்சர்கள் எவருக்கும் விசேட சிறப்புரிமைகள் கிடைக்காது. அவர்கள் எம்.பிக்களின் சம்பளத்திற்கமையவே பணியாற்ற வேண்டும்.



# 13 பேருக்கும் உரையாற்ற நேரம் தருவதில்லை


ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்த நாள் முதல், எங்களது 13 எம்.பிக்களுக்கும் சபையில் உரையாற்றுவதற்கான நேரத்தை ஆளுங்கட்சியினர் ஒதுக்கித்தருவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும சபையில் தெரிவித்தார்.

கருத்து சுதந்திரம் தொடர்பில் சபையில் பேசப்படுகிறது. ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்து சுதந்திரம் இந்த அதியுயர் சபையில் மீறப்படுகிறது. குறிப்பாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்து நான்கு அணிகள் சுயாதீனமாக இயங்கி வருகின்றன. இந்த நான்கு அணிகளில் மூன்று அணிகளுக்கு சபையில் உரையாற்றுவதற்கு ஆளுங்கட்சியினருக்கான நேரம் வழங்கப்படுகிறது. எனினும் எனது அணியினருக்கு சபையில் பேசுவதற்கான நேரம் வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவித்தார்.



பாராளுமன்றங்களுக்கு இடையிலான ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் இலங்கைக்கு வர உள்ளார். அவரை சந்திப்பதற்கான நேரம் ஒதுக்கியிருக்கிறேன். எனவே பாராளுமன்றத்துக்குள் எங்களுக்கு பேச வாய்ப்பு மறுக்கப்படுவதை சர்வதேசத்துக்குக் கொண்டு செல்ல நாம் விரும்பவில்லை. எனவே இது தொடர்பில் சபாநாயகர், கட்சி தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடி எமக்கான வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# வற் வரிக்கு ஐ.எம்.எப் காரணமில்லை



சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனையின் அடிப்படையில் வற் வரி அதிகரிக்கப்படவில்லை என சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. வற் வரியை கூட்டியமைக்கு எதிராக எதிர்க்கட்சியினர் விமர்சனங்களை முன்வைத்திருந்தனர்.

இவ்வாறான நிலையில், அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்க வேண்டும். எனவே அரசாங்கம் மேலதிக வருமானத்தைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனாலேயே வற் வரியை அதிகரித்துள்ளோம் என்றார்.

## தீபாவளிக்கு அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்க வேண்டும்



தமிழர்களால் கொண்டாடப்படுகின்ற தீபாவளி பண்டிக்கைக்கு அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணனன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

பொருளாதாரம் வீழ்ந்துள்ள நிலையில் 37 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மக்களிடம் அதிகளவான வரியை அறிவிட்டு அவர்களுக்கு செலவு செய்ய முயன்றால், நாட்டின் பொருளாதாரத்தை எப்படி கட்டியெழுப்ப முடியும் எனவும் கேள்வி எழுப்பினார். ஆளுங்கட்சியை சமாதானப்படுத்தவே ஜனாதிபதி தொடர்ந்து முயற்சிக்கிறார் எனவும் இராதாகிருஷ்ணன் எம்.பி தெரிவித்தார்.

இதேவேளை தமிழர்களால் கொண்டாடப்படுகின்ற தீபாவளி திருநாள், அடுத்த மாதம் 24ஆம் திகதி வருகிறது. எனவே தீபாவளிக்காவது அரிசி, பருப்பு, பயறு போன்ற அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சபையில் வலியுறுத்தினார்.


## பொது அறிவித்தல்

ரிஜென்ட் வெடிங் கார்ட்ஸ் (பீவீட) எல்டீடி
பீ - வி 00258184
இல. 62, டீ.எஸ். சேனநாயக வீதி, கண்டி.

கிரீன் சீ இன்டர்நெஷனல் (பீவீட) எல்டீடி
பீ - வி 00260554
இல. 12, 2 வது ஒழுங்கை, மல்டிபே, காலி.

ஆர்க்டெக் இனோவேஷன்ஸ் (பீவீட) எல்டீடி
பீ - வி 00262365
இல. 638/H/54, ஸ்பரைட்ஸ் ரெசிடென்சிஸ், துனந்தஹேன, கொரத்தோட்ட, கடுவெல.

ஜே. எச். கப். ஒப் ஹெல்த் என்டர்பிரைசஷ் (பீவீட) எல்டீடி
பீ - வி 123968
இல. 77, 1 வது மாடி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.

கம்பனியின் புதிய பெயர்
ஒசந்த ஜெம்ஸ் என்ட் மைனிங் கம்பனி (பீவீட) எல்டீடி

பணிப்பாளர்

## அறிவித்தல்
## பீபள்ஸ் மேற்சன்ட் பினன்ஸ் பிஎல்சி - (PQ – 200)
## 38வது வருடாந்த பொதுக்கூட்டம்

கீழ்காணும் இந்தஅறிவித்தலின் பிரகாரம் பீபள்ஸ் மேர்சன்ட் பினன்ஸ் பிஎல்சி இன் 38வது வருடாந்த பொதுக்கூட்டம் (“AGM”) தொடர்பாக 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதியன்று முறைப்படி கொடுக்கப்பட்ட அறிவித்தலின்படி வெள்ளிக்கிழமை, 2022 செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று காலை 9.00 மணிக்கு இணையம் ஊடாக நிகர்நிலை தளத்தின் (Virtual Platform) நடைபெற உள்ளது.

கூட்டம் தொடர்பான நிகழ்ச்சிநிரல் மற்றும் கூட்டம் தொடர்பான அறிவுறுத்தல்களையும் படிவத்தையும் கொழும்புபங்குச் சந்தையின் இணையத்தளம் https://www.cse.lk/pages/company-profile/company--profile.component.html?symbol=PMB.N0000 மற்றும் கம்பெனியின் இணையத்தளத்திலும் (https://peoplesmerchant.lk/) பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் சுற்றறிக்கை இலக்கம். 4 இன் 2022 படி 2022 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி கொழும்பு பங்குச் சந்தையினால் வெளியிடப்பட்ட வருடாந்த அறிக்கைகளின் அச்சிடப்பட்ட பிரதிகள் இவ்வருடம் வழங்கப்படமாட்டாது. ஏதேனும் மேலதிக விபரங்களைப்பெற்றுக்கொள்ள, திருமதி நதீகா ஜெயவிக்ரம (இரகசிய செயலாளர்) தொடர்பு கொள்ளவும் தொ.பேசி: 94 0117 666 333 நீட்டிப்பு எண் (ext. 352) அல்லது மின்னஞ்சல்: pmfagm@pmb.lk

கூட்டத்தில் பங்குபெறவிரும்பும் பங்குரிமையாளர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட இணையத்தளங்களின் ஊடாக கிடைக்கப்பெறும் பதிவு படிவத்தை பூர்த்திசெய்து கூட்டம் ஆரம்பிக்கும் குறிப்பிட்ட நேரத்தில் இருந்து 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் pmfagm@pmb.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பீபள்ஸ் மேற்சன்ட் பினன்ஸ் பினன்ஸ் பிஎல்சி இன் சபையின்**
தீர்மானத்தின்படி
செயலாளர்கள்
கோர்ப்பரேட் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட்
2022 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 02ஆம் திகதி


வடக்கு, கிழக்கில் இராணுவம் இருப்பது

# கூட்டமைப்புக்கு மட்டுமே பிரச்சினை

யுத்தத்துக்குப் பின்னர் வடக்கு, கிழக்கில் இராணுவம் வசமிருந்த 90 சதவீதமான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் உரையாற்றிக்கொண்டிருந்த செல்வம் அடைக்கலநாதன் எம்.பியின் உரைக்கு குறுக்கீடு செய்து உரையாற்றும்போதே சரத் வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் பல நல்ல விடயங்களை செய்கிறார்கள். அது பற்றியெல்லாம் கூட்டமைப்பினர் பேசுவதில்லை. வடக்கு, கிழக்கில் இராணுவம் இருப்பது கூட்டமைப்புக்கு மாத்திரம் பிரச்சினையாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



இதற்கு பதலளித்த அடைக்கலம் எம்.பி, இராணுவம் செய்யும் நல்ல விடயங்களை நாம் குறைக்கூறியதில்லை. இராணுவம் தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமிக்கக்கூடாது என்பதே எமது கோரிக்கை எனவும் தெரிவித்தார்.

# உண்மைகளை மறைத்தமையே இந்த நிலைமைக்கு காரணம்



நாட்டின் பொருளாதார நிலைமைகள் தொடர்பில் அரசாங்கம் உண்மைகளை மறைத்தமையே, பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஊழியர் மட்டத்தில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை அறிந்துகொள்வதற்கான உரிமை நாட்டு மக்களுக்கும் பாராளுமன்றத்துக்கும் உள்ளது. எனவே இந்த ஒப்பந்தத்தை நாட்டு மக்களுக்கு தெரியாமல் மறைக்க முயற்சிக்க வேண்டாம். எனவே ஒப்பந்தத்தை உடனடியாகச் சபைப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.




கிழக்கில் காணிப் பத்திரங்கள் வழங்கலில்

# திருக்கோவில் முதலிடம்



■ வி.ரி. சகாதேவராஜா

கிழக்கு மாகாணத்தில் காணிப் பத்திரங்கள் வழங்கலில் திருக்கோவில் பிரதேச செயலகம் முதலிடம் பெற்றுள்ளது.

இதற்காக கிழக்கு மாகாண காணி ஆணையாளர் தசநாயக்க நேரில் விஜயம் செய்து பாராட்டினார்.

அச்சமயம், திருக்கோவில் பிரதேசத்தில் காணி ஆவணங்கள் பெற்றுக் கொள்ளாத மக்களுக்கான காணி ஆவணங்கள் கையளிக்கும் நிகழ்வு, பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விலும் கிழக்கு மாகாண காணி நிர்வாக திணைக்களத்தின் மாகாணக் காணி ஆணையாளர் டி.எம்.ஆர்.சி தசநாயக பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, 362 பயனாளிகளுக்கு காணி



ஆவணங்களை வழங்கிவைத்தார்.

2020ஆம் மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் கிழக்கு மாகாண பிரதேச செயலகங்களில் அதி கூடிய காணி ஆவணங்களை தாயாரித்த பிரதேச செயலகமாக, திருக்கோவில் பிரதேச செயலகம் இருந்ததாக கிழக்கு மாகாண காணி ஆணையாளரால் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டன.

மேலும், இவ்வாறான மிகச் சிறந்த அடைவை பெற்றுக் கொண்டமைக்காக பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர், காணி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட காணிப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு மாகாண காணி நிர்வாக திணைக்களத்தால் பாராட்டு சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன.

இதற்கான முன்னின்று உழைத்த கிராம சேவை உத்தியோகத்தர்களும் பாராட்டப்பட்டனர்.



தந்தையின்

## வானில் சிக்குண்டு குழந்தை உயிரிழப்பு

■ ஹஸ்பர்

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாயன்மார் திடல் பகுதியில் தந்தையின் வானில் சிக்குண்ட 2 வயது குழந்தை உயிரிழந்த சம்பவம், நேற்று முன்தினம் (07) இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, தந்தை, திருகோணமலைக்கு திருமண வைபவத்துக்கு செல்ல உள்ள நிலையில், வீட்டில் வைத்து வானை பின்னால் எடுத்த போது, அதற்குள் சிக்குண்ட மகள் ஸ்தலத்தில் பலியானதாக ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரியவருகிறது.

இவ்வாறு உயிரிழந்த குழந்தை, தம்பலகாமம் நாயன்மார் திடலை சேர்ந்த ஆர்.நசிட்றா (வயது 02) என பொலிஸார் தெரிவித்தனர்.

வான் தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், குழந்தையின் சடலம், திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

கல்முனையில்

## சட்டவிரோத அங்காடிகளை அகற்றும் நடவடிக்கை

■ அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை மாநகர சபை ஆள்புல எல்லையினுள் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் சட்டவிரோத வியாபார நிலையங்களை அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை மாநகர மேயர் ஏ.எம்.றகீப் விடுத்துள்ள பணிப்புரைக்கமைவாக, மாநகர சபையின் வருமான பரிசோதகர்கள் நேற்றுமுன்தினம் (07) முதல் இந்நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதான வீதிகளிலும் உள்ளூர் வீதிகளிலும் சட்டவிரோதமாக பலகை, மேசை மற்றும் கொட்டகை அமைத்து மீன், மரக்கறி, பழ வகைகள், இளநீர் மற்றும் இதர பொருட்களின் வியாபார நடவடிக்கைகளால் வாகனப் போக்குவரத்துகளுக்கும் பாதசாரிகளுக்கும் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்பட்டு வருவது தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளைத் தொடர்ந்தே, இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆகையால், சம்பந்தப்பட்டவர்கள், இச்சட்டவிரோத அங்காடிகளை உடனடியாக அகற்றிச் செல்ல வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இவ்வறிவுறுத்தலை மீறி வியாபாரத்தில் ஈடுபடுவோரின் தளபாடங்கள், பொருட்கள் கையகப்படுத்தப்படும் என்பதுடன், சம்பந்தப்பட்டோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




விடைத்தாள்களை மதிப்பீடு செய்த

## ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு வழங்கவும்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை விடைத்தாள்களை மதிப்பீடு செய்த ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை வழங்குமாறு, இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதித் தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப், நேற்று (08) கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை பரீட்சை திணைக்களம் வெளியிட்டுள்ள போதிலும், விடைத்தாள்களை மதிப்பீடு செய்த ஆசிரியர்களுக்கு இதுவரை கொடுப்பனவு வழங்கப்படவில்லையென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, ‘தேசிய ரீதியில் குறிப்பாக, பரீட்சை திணைக்களத்தால் வருடாந்தம் நடத்தப்படும் பரீட்சைகளுக்கான



நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. எனினும், ஒதுக்கப்பட்ட மற்றும் அதற்கேற்ப வழங்குவதற்கென அனுமதிக்கப்படும் கொடுப்பனவுகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

‘தற்போதைய சூழ்நிலையில் அதிகரித்துள்ள செலவினங்களை நோக்கும் போது வழங்கப்படும் கொடுப்பனவானது எவ்விதத்திலும் போதுமானது அல்ல. பொருளாதாரப் பிரச்சினைகள் மத்தியிலும் தமது கடமைகளைப் பொறுப்புணர்வுடன் செவ்வனே நிறைவேற்றிய ஆசிரியர்களுக்கு

**“ பரீட்சை திணைக்களத்தால் வருடாந்தம் நடத்தப்படும் பரீட்சைகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. எனினும், ஒதுக்கப்பட்ட மற்றும் வழங்குவதற்கென அனுமதிக்கப்படும் கொடுப்பனவுகள் குறைவாகவே காணப்படுகின்றன. தமது கடமைகளைப் பொறுப்புணர்வுடன் செவ்வனே நிறைவேற்றிய ஆசிரியர்களுக்கு பொறுப்பு வாய்ந்த திணைக்களங்கள் பொறுப்பற்றுச் செயற்படுவது கவலைக்குரியது**

பொறுப்பு வாய்ந்த திணைக்களங்கள் பொறுப்பற்றுச் செயற்படுவது கவலைக்குரியது.

“உரிய ஆசிரியர்களுக்கு உடனடியாக கொடுப்பனவு நிதியை ஒதுக்குமாறும் அவ்வாறு செய்யாதவிடத்து ஒன்றிணைந்த ஆசிரிய சங்கங்களாக இது தொடர்பாக மேலதிக செயற்பாடுகளை முன்னெடுப்போம்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாணின் விலையை 200 ரூபாய்க்கும் மேல் அதிகரிக்கும்படி

# தொலைபேசியில் மிரட்டுகிறார்கள்



யாழ்.மாவட்டத்தில் ஒரு இறாத்தல் பாணின் விலையை 200 ரூபாய்க்கும் மேல் அதிகரிக்கும்படி சிலர் மிரட்டி வருவதாக, யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு வெதுப்பாக உரிமையாளர் சங்க தலைவர் கந்தசாமி குணரட்ணம் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (07) இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளரிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “மாவட்டத்தில் பெரும்பாலான வெதுப்பக உரிமையாளர்கள் எமது சங்கத்தின் கோரிக்கையை ஏற்று, ஒரு இறாத்தல் பாணின் நிர்ணய விலையாக 200 ரூபாய்க்கு விற்பனை செய்கிறார்கள்.

“சிலர் அவ்வாறு விற்பனை செய்ய முடியாது விலையை அதிகரிக்குமாறு என்னை தொலை பேசியில் மிரட்டு கிறார்கள்.

“தற்போதைய சூழ்நிலையில் ஒரு இறாத்தல் பாண் 200 ரூபாய்க்கு விற்பனை செய்ய முடியும். எமது சங்கத்தில் இருக்கின்ற சிறு வெதுப்பாக உரிமையாளர்கள் 200 ரூபாய்க்கு இணங்கி விற்பனை செய்கின்ற நிலையில், சில பெரிய முதலாளிகள் விற்பனை செய்ய முடியாது எனக் கூறுவதை ஏற்க முடியாது.

“இதை நான் ஊடகங்கள் முன் கூறக்கூடாது என சில நிறுவனங்கள் கோரிக்கை விடுத்தன. அவ்வாறு அவர்களின் கோரிக்கையை ஏற்று மௌனமாக இருக்க முடியாது. ஏனெனில், யாழ். மாவட்டத்தில் பாணின் விலை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துக் கூறியமையால் தான் 200 ரூபாய்க்கு பாண் விற்பனை செய்ய முடிந்தது.

“ஒரு சிலரின் தேவைகளுக்காக பாண் விலையை அதிகரித்து, ஏழை மக்களின் வயிற்றில் அடிக்க முடியாது. பாணின் விலையை 10 ரூபாயால் குறைப்பதற்குரிய மாற்று ஒழுங்குகள் தொடர்பில் ஆலோசித்து வருகின்றோம்” என்றார்.



புதுக்குடியிருப்பு ஸ்ரீ உலகளந்த

## பிள்ளையார் கோவில் சப்பர வெள்ளோட்டம்

### இன்று தேர்

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள உலகளந்த பிள்ளையார் கோவிலுக்கு முதன் முதலாக சம்பரம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதுடன், தேரும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 01ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, நேற்று முன்தினம் (07) வேட்டைத் திருவிழாவும் நேற்று (08) சம்பர திருவிழாவும் நடைபெற்றதுடன், இன்று (09) தேர்திருவிழா நடைபெறவுள்ளது.

வரலாற்று புகழ் கொண்ட உலகளந்த பிள்ளையார் கோவிலுக்கு புதுக்குடியிருப்பு பிரதேச மக்களினதும் புலம்பெயர்ந்த மக்களினதும் நிதிப்பங்களிப்புடன் புதிதாக பாரிய சப்பரம் ஒன்று அமைக்கப்பெற்று, அதன் வெள்ளோட்ட நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இவ்வாறே புதிதாக பாரிய தேர் கட்டப்பட்டு, தேர் வெள்ளோட்டம் நேற்று (08) மாலை நடைபெற்றுள்ளதுடன், தேர் திருவிழாவான இன்று (09) இலங்கையில் புகழ்பெற்ற பாலமுருகன் குழுவினரின் நாதசங்கமும், இரவு இசை நிகழ்வாக எம்.சிவகுமாரின் அக்கினி இசைக் குழுவின் இசைவிருந்து நிகழ்வும் நடைபெறவுள்ளன.





8 ஆண்டுகளாக செயலிழந்துள்ள

## புழுதியாறு குளத்தின் ஏற்று நீர்ப்பாசன திட்டம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, மாயவனூர், புழுதியாறு குளத்தின் ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் 32 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு, கடந்த 08 ஆண்டுகளுக்கு மேலாக செயலிழந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால் குடிநீர் வசதியின்மை, வாழ்வாதார வசதியின்மை, வறுமை காரணமாக பல்வேறு நெருக்கடிகளை குறித்த பிரதேச மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு, மலையகத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மலையகத் தமிழ் மக்களே மாயவனூர் பகுதியில் அதிகம் வசிக்கின்றனர்.

அடிப்படை வாழ்வாதார வசதிகள் எதுவும் அற்ற நிலையிலும் தற்போதைய வரட்சி காரணமாக குறித்த பகுதியில் கிணறுகளில் கூட தண்ணீரில்லாத நிலை காணப்படுகின்றது.

2014ஆம் - 2015ஆம் ஆண்டுகளில் வடக்கு மாகாண சபையால் குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து 320 இலட்சம் ரூபாய் செலவில் உப உணவு பயிர்ச்செய்கையை நோக்கமாக கொண்டு, மாயவனூர் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனமே தற்போது எவ்வித பயன்பாடும் இன்றிக் காணப்படுகிறது.

இவ்வாறு பெருந்தொகையான நிதியைச் செலவிட்டும் குறித்த கிராமத்தில் வாழும் மக்களுக்கு எந்த நன்மைகளும் ஏற்படவில்லை.

அரசியல் தீர்வு கோரி

## குருநகரில் போராட்டம்

வட,கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் அனுசரணையோடு, ‘கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்’ என்னும் தொனிப்பொருளில், குருநகரில் போராட்டம், நேற்று (08) காலை முன்னெடுக்கப்பட்டது.

நிரந்தரமான அரசியல் தீர்வை வலியுறுத்தி இடம்பெற்று வரும் 100 நாள் செயற்றிட்டத்தில் 39 நாளான போராட்டமாகவே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.







இதன்போது, ‘பயங்கரவாத தடைச்சட்டத்தை உடன் நிறுத்து’, ‘கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்’, ‘இலங்கையின் வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்’ போன்ற பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நுவரெலியா மாவட்டத்துக்கான

# புதிய DIG கடமையேற்பு

■ டி.சந்ரு

நுவரெலியா மாவட்டத்தின் பிரதி பொலிஸ் மா அதிபராக பதவியேற்றுள்ள எச்.எஸ்.என்.பீரிஸ், தனது கடமைகளை நேற்று (8) பொறுப்பேற்றார்.

இந்த நிகழ்வு நுவரெலியாவிலுள்ள பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.



அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்கப்பட்டு, சர்வமதத் தலைவரின் ஆசிர்வாதத்துடன் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

முன்னர் பதவி வகித்த பிரதி பொலிஸ்மா அதிபர் பிரசாத் ரணசிங்க இடமாற்றம் செய்யப்பட்டமையால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு, எச்.எஸ்.என் பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலை விளையாட்டுகளால்

# நற்பிரஜைகளை உருவாக்கலாம்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாணவர்கள் விளையாட்டுகளை முறையாக கையாள வேண்டும். இவ்வாறு செயற்படாத உத்தியோகத்தர்களின் கவனக்குறைவால் மாணவர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளானர்கள் என மத்திய மாகாண ஆளுநர் லலித். யூ.கமகே தெரிவித்தார்.

கடந்த வருடம் நடைபெற்ற உலக கனிஷ்ட தடகளப் போட்டிக்கு இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தச் சென்ற அணிகளுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களும் இதற்கு உதாரணமாகும். மத்திய மாகாண பாடசாலைகளின் விளையாட்டு விழாவின் நிறைவு விழா, மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில்




கண்டி, போகம்பர விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில், இந்த வருட விளையாட்டுப் போட்டிகளில், திறனை வெளிப்படுத்தி சாதனை படைத்த மாணவர்களுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இதன்போது உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். குறிப்பாக பாடசாலை விளையாட்டுகள் மிகவும் முக்கியமானவை. ஏனெனில் பாடசாலை விளையாட்டு மூலம் அறிவும் திறமையும் வளர்க்கப்படுவதோடு, வெற்றி தோல்வியை சமமாக ஏற்றுக்கொள்ளக் கூடிய பிரஜைகளை உருவாக்க முடியும் என்றார்.

தோட்டப்புற குழந்தைகள் மத்தியில்

# போசாக்கு இன்மை அதிகரிப்பு

## 'ப்ரொடக்ட்' அமைப்பு சுட்டிக்காட்டுகிறது

■ சுதத்.எச்.எம்.ஹேவா

தோட்டப்புற குழந்தைகள் மத்தியில் போசாக்கு இன்மை அதிகரித்துள்ளதாக 'ப்ரொடக்ட்' அமைப்பின் உப தலைவர் கே. மைதிலி தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலையேற்றம் காரணமாக, தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் நாளாந்த சம்பளம் எந்த வகையிலும் போதுமானதாக இல்லை.

இந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் கூலியைக் கொண்டு, இத்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு உணவளிக்கவோ அல்லது பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்பவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமைகள் காரணமாக, தோட்டத்திலுள்ள பிள்ளைகள் போசாக்கு இன்மைக்கு ஆளாகும் அபாயம் அதிகளவில் காணப்படுவதுடன் தோட்டத்திலுள்ள பிள்ளைகள் முறையாகக் கல்வி கற்கும் வாய்ப்பை இழக்கும் அபாயமும் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலைமைகள் தொடர்பில்



உரிய அதிகாரிகள் உரிய கவனம் செலுத்தி, தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏதாவது சலுகை வேலைத்திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு செய்யாவிடில் பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரம் பாரிய வீழ்ச்சியை சந்திக்க நேரிடும் என்பதுடன் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சில தொழிற்சங்கங்கள் இது தொடர்பில் மௌன கொள்கையை கடைப்பிடிப்பது வருத்தமளிக்கின்றது என்றார்.

# நடமாடும் சேவை

■ என்.ஆராச்சி

தெரணியகல பிரதேசத்திலுள்ள சில தோட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கான நடமாடும் சேவை, மியன்விட்ட சரஸ்வதி தமிழ் வித்தியாலயத்தில் இன்று (09) காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய, தெரணியகல பிரதேச செயலகப் பிரிவின் மலைத் தோட்டம், கொஸ்கஹா கந்த தோட்டம், மியனவிட்ட தோட்டம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் இதன்மூலம் பயனடையவுள்ளனர்.

இதன்போது, பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், பெண்கள், முதியவர்கள், குழந்தைகள் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்துதல், இளம் சமூகத்தினருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், தொழில் பயிற்சி படிப்புகள் அறிமுகம், தேசிய அடையாள அட்டை பெற தேவையான ஏற்பாடுகள் என்பன முன்னெடுக்கப்படவுள்ளன என, தெரணியகல பிரதேச செயலாளர் மதுஷானி சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும் வணிகத் துறை, போதைப்பொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு உள்ளிட்ட ஆலோசனை சேவைகளும் மக்களுக்கு வழங்கப்படுமென பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

# 'சில்லறை' முரண்பாடு

■ சுதத் எச். எம். ஹேவா

ஹட்டனில் இருந்து குறுகிய வழித்தடங்களில் சேவைகளில் ஈடுபடும் சில தனியார் பஸ்களில் பணிபுரியும் நடத்துநர்களிடம் சில்லறை குற்றிகள் இல்லை எனக் கூறி, பயணிகளுடன் முரண்படுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர். இதனால் பயணிகளும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

ஹட்டனிலிருந்து குறுகிய தூர சேவையில் ஈடுபடும் சில தனியார் பஸ்களில் பணிபுரியும் நடத்துநர்கள் தங்களிடம் சில்லறை குற்றிகள் இல்லை எனவும் மீதி பணத்தை முறையாக செலுத்துவதில்லை என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

சில சமயங்களில் சில நடத்துநர்கள், மிகுதிப் பணம் வழங்குவதற்கான நாணயங்கள் தம்மிடம் இல்லை என தெரிவித்து, அந்தந்த இடங்களுக்கு டிக்கெட் வழங்குவதில்லை என்றும் பல சமயங்களில் இரண்டு ரூபாய் மட்டுமல்ல, ஐம்பது ரூபாய் கூட தருவதில்லை என்றும் பயணிகள் கூறுகின்றனர்.

# லொறி நசித்த வீட்டை புனரமைத்து தர உறுதி

■ ரஞ்சித் ராஜபக்ஸ

நுவரெலியாவில் இருந்து பதுளைக்கு அரிசி ஏற்றிச் சென்ற போது, பள்ளத்தில் பாய்ந்த லொறி, கடும் முயற்சியின் பின்னர், நேற்றுமுன்தினம் (07) பிற்பகல் மேலே கொண்டு வரப்பட்டது என நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த லொறி, நுவரெலியா-பதுளை பிரதான வீதியில் ஹக்கல தாவரவியல் பூங்காவுக்கு அருகில், வீதியில் இருந்து 50 அடி பள்ளத்தில் உள்ள வீடொன்றின் மீது 5ஆம் திகதி 4 மணியளவில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் லொறியின் சாரதி மாத்திரம் காயமடைந்துள்ளதாகவும், விபத்தில் வீடு பாரிய சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியை மீட்ட பின்னர், அந்த வீட்டுக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டதுடன், விபத்தில் பாரியளவில்



சேதமடைந்த வீட்டை சீர்செய்து திருத்துவதற்கு லொறியின் உரிமையாளர் இணக்கம் தெரிவித்ததாக நுவரெலியா பொலிஸ் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

விபத்தை ஏற்படுத்திய லொறியின் சாரதிக்கு எதிராக நுவரெலியா நீதவான் நீதிமன்றில் முன்னிலையாகி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பிரதான பொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார். நுவரெலியா ஹக்கல வீதியில் இடம்பெறும் விபத்துகளை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நுவரெலியா வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நுவரெலியா பொலிஸ் அதிகாரிகளிடம் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இரத்ததானம்



இலங்கை பொலிஸின் 156ஆவது நிறைவையொட்டி, பொகவந்தலாவை பொலிஸ் மற்றும் 319/0 லொயினோன் கிராமசேவகர் பிரிவும் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததானம், கெம்பியன் வைத்தியசாலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கான உதவிகளை வேல்ட் விஷன் நிறுவனம், கெம்பியன் கிராம அபிவிருத்திச் சங்கம், தோட்ட நிர்வாகம் என்பன வழங்கியிருந்தன.





உடப்புஸ்ஸலாவை நகரம்

# அபிவிருத்தியில் அனாதையாகியுள்ளது

■ ஆ.ரமேஸ்

வலப்பனை பிரதேச சபைக்கு உட்பட்ட உடப்புஸ்ஸலாவை நகரில் காணப்படும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி குறைப்பாடுகளை நிவர்த்திக்க உள்ளூராட்சி மன்றமும் அரசாங்கமும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

இது தொடர்பில், உடப்புஸ்ஸலாவை நகர வர்த்தக சங்கம் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது, வலப்பனை பிரதேச சபைக்கு வருமான வரியை செலுத்தி வரும் நகரமாக உடப்புஸ்ஸலாவை நகரம் காணப்படுகின்ற போதிலும் அபிவிருத்திகள் ஏதும் இடம்பெறாமல் புறக்கணிக்கப்பட்ட நகரமாகவே காணப்படுகிறது.

இந்த நகரில் வசிக்கும் நகர வாசிகளுக்கு தாராளமான குடிநீர் கிடைப்பதில்லை. நாள் ஒன்றில் காலை நேரத்தில் அரை மணித்தியாலம் மாத்திரமே குடிநீர் விநியோகிக்கப்படுகின்றது.

இதனால் வீட்டுத் தேவைகள் உட்பட ஏனைய தேவைகளுக்கு நீரின்றி அசௌகரிகத்துக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.

அத்துடன் நகரில் பொது மலசலகூடம் இல்லாமையால், நகருக்கு அன்றாடம் வருகை தரும் மக்கள் பாதிக்கப்படுவதுடன், நகரில் மறைவிடத்தைத் தேடி தமது தேவையை நிறைவேற்றும் அவல நிலை உள்ளது.

நகரில் பஸ் தரிப்பிடம் இல்லை என்பதுடன், நகரில் நாள் சந்தை அல்லது வாராந்த சந்தை இல்லாத காரணத்தால் மரக்கறி கொள்வனவு செய்வதில் மக்கள் பெரிதும் பாதித்துள்ளனர். எனவே இவ்வாறு பல குறைபாடுகளுடன் எவ்வித அபிவிருத்தியும் முன்னெடுக்கப்படாத நகரமாக உடப்புஸ்ஸலாவை நகரம் காணப்படுவதாக உடப்புஸ்ஸலாவை நகர வர்த்தக சங்கத்தினர் தெரிவித்தனர்.



'எல்ல ஒடிசி' ரயில்

# ஒவ்வொரு வியாழனும் ஓடும்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

இதுவரை வார இறுதி நாள்களில் பயணித்த 'எல்ல ஒடிசி' விசேட அதிவேக ரயில், ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை வரை பயணிக்கும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ரயில் சேவையானது, நேற்று (08) ஆரம்பமானது. வார இறுதி நாள்களில் காலை 5.30 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் 'எல்ல ஒடிசி' சிறப்பு விரைவு ரயில், அன்றைய தினம் பிற்பகல் 3.45 மணிக்கு பதுளை ரயில் நிலையத்தை சென்றடையும்.

கொழும்பு கோட்டையில் இருந்து




புறப்படும் 'எல்ல ஒடிஸி' ரயிலில் 08 பெட்டிகள் உள்ளன.


சில ரயில் நிலையங்களில் மட்டும் நிறுத்திச் செல்லும் இந்த ரயில், சுற்றுலா பகுதிகளற்ற சில ரயில் நிலையங்களில் சில நிமிடங்கள் நிறுத்தப்படுவதுடன், ரயிலில் பயணிக்கும் சுற்றுலாப் பயணிகள், ரயிலில் இருந்தே அந்த சுற்றுலா தலங்களை பார்வையிட்டு புகைப்படம் எடுக்க வாய்ப்பு வழங்கப்படுகிறது.

நேற்று (08) பயணித்த 'எல்ல ஒடிஸி' ரயிலில் அதிகமான உள்ளூர் சுற்றுலாப் பயணிகளும் பயணித்தனர்.

# பெருந்தோட்ட மக்களுக்கு விசேட கொடுப்பனவு

உலக உணவுத் திட்டத்தின் கீழ், அனைத்து தோட்டத் தொழிலாளர்கள், நகர்ப்புற பெருந்தோட்ட சமூகத்தினருக்கும் ஒக்டோபர் மாதம் முதல் விசேட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியை மையப்படுத்தி ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக, தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் நகர்புறங்களை அண்மித்த தோட்ட மக்களுக்கு



இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். பெருந்தோட்டம், வீட்டுப் பணியாளர்கள் தொடர்பான அமைச்சர்கள் குழு நேற்றுமுன்தினம் (7) முதல் முறையாக பாராளுமன்றத்தில் கூடியபோதே, இது குறித்து கலந்துரையாடப்பட்டு உள்ளது.

தற்போதைய நெருக்கடிக்கு மத்தியில் ஜப்பான், கொரியா, மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு தொழிலாளர்களை அனுப்புவதை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# சீருடைக்குள் நுழைந்து கல்வியைப் பறிக்கும் போதைப்பொருள்

எமது அண்டை நாடான இந்தியாவில் சில மாநிலங்கள், மாவட்டங்களில் பாடசாலை மாணவர்கள் தொடர்பில் பல்வேறான செய்திகள் வெளியாகிவருவதை அவதானித்து இருக்கின்றோம். அதில், சீருடையில் மாணவர்கள் நடுவீதியில் போதையில் தள்ளாடும் காட்சிகள், நெஞ்சத்தைக் கனக்கச் செய்யும்.

படிப்பிலும் விளையாட்டிலும், ஏனைய நல்ல பல விடயங்களிலும் கவனம் செலுத்தவேண்டிய மாணவர் பருவத்தை வீணடித்துப் பலரும், போதைக்கு அடிமையாக்கி விட்டு, எதிர்காலத்தை சூனியமாக்கிக் கொள்கின்றனரே என்ற கவலை, பெரும்பாலான பெற்றோர்களை நடைப்பிணங்களாக்கிவிடுகிறது. அந்தளவுக்கு ஒருசில இடங்களில் மாணவர்கள், மிகவும் கேவலமான முறையில் நடந்துகொண்டுள்ளனர்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில், மாணவர்களை முழுமையாக இலக்குவைத்து, போதைப்பொருள் விநியோகிக்கப்படுவது ஒன்றும் புதிதல்ல. என்றாலும், அண்மைய காலங்களில் அதிகரித்துவிட்டது என்பதை, ஒவ்வொரு பெற்றோரும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தங்களுடைய பிள்ளைகள் யார், யாருடன் நண்பர்களாக இருக்கின்றனர்? அந்த நண்பர்களின் பழக்க வழக்கங்கள் என்ன? பாடசாலைகளுக்கு அண்மையில் இருக்கும் கடைகள், அங்கு எவ்வாறான பொருட்கள் விற்கப்படுகின்றன என்பது தொடர்பிலும் பிள்ளைகளின் நடவடிக்கைகள் குறித்தும் ஒவ்வொருநாளும் அவதானிக்க வேண்டும்.

குறிப்பாக, மேலதிக வகுப்புகள், விடுமுறை நாள்களில் வகுப்புகளுக்குச் செல்வது, விசேட தினங்களில் நண்பர்களுடன் வெளியே செல்லல், பாடசாலைகளில் முக்கிய நாள்களில் நேரம் தாழ்த்தி வீட்டுக்குத் திரும்புதல் அல்லது, மறுநாள் விடியற்காலை திரும்பிவருவது, நண்பர்களின் வீடுகளிலேயே தங்கிவிடுவதாகக் கூறுவது உள்ளிட்டவை தொடர்பில் விழிப்பாக இருக்கவேண்டும்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பழக்கவழக்கங்கள் அதிகரித்துள்ளதை அடுத்தே, மாணவர்களின் பாடசாலை பையை சோதனையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.

அது ஓரளவுக்கு நன்மை பயக்கும் செயற்பாடாக இருந்தாலும், ஏனைய மாணவர்களை மனஉளைச்சலுக்கு உட்படுத்திவிடக் கூடாது. இல்லையேல், அது என்னவென மாணவர்கள் பரிசோதித்துப் பார்க்க முயன்று விடுவர். அதேபோல, பெற்றோரும் மிகக் கவனமாக இருக்கவேண்டும்.

புகைப்பழக்கத்தை வழக்கமாகக் கொண்டிருந்த தந்தை, வீட்டுக்கு எடுத்துச்சென்றிருந்த புகைப்பொருளை பாடசாலைக்கு எடுத்துவந்த மகள், சக மாணவிகள் சிலருடன் இணைந்து, பெண்களின் மலசலகூடத்தில் வைத்து, புகைப்பிடித்த சம்பவம் ஆனமடுவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. மாணவர்கள் மட்டுமன்றி, மாணவிகளும் போதைக்கு அடிமையாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மாணவப் பருவமானது, ஒவ்வொன்றையும் சோதனைக்கு உட்படுத்தி பார்க்கும். நல்லதை விடவும் தீயபழக்கங்களை விரைவில் பற்றிக்கொள்ள எத்தனிக்கும் பருவமாகும். தீயபழக்கங்கள் பற்றிக்கொண்டால், அடிமையாக்கிவிடும் என்பதில் ஐயமே இல்லை. அதிலிருந்து மீண்டெழுவது என்பதை, நினைத்தும்பார்க்க முடியாது. ஆகையால், மாணவர்கள் மத்தியில் போதையை விதைக்கும் நயவஞ்சர்கள் தொடர்பிலும், விழிப்பாக இருக்கவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

பக்தர்கள், இறைவனுடன் மௌனமாகப் பேசிக்கொண்டே இருப்பார்கள். நெஞ்சாறக் கடவுளை நம்பினால், நாம் மௌனமாகப் பேசுவது இறைவனுக்குக் கேட்கும்.

வாய்மூலம் பேசுவதைவிட, இதயத்தின் ஊடாக உரைப்பது உறுதியானது. தெய்வ நம்பிக்கையே பலம் மிக்கது. பல சமயங்களில், வேண்டுதல்கள் மூலம் பல சிறப்பான காரியங்கள் நிகழ்வதுண்டு. நெஞ்சின் உறுதி காரியசித்தி. நம்பிக்கைகளை இழந்தால், செய்காரியங்கள் நழுவிவிடலாம். நம்பிக்கைகள் உரமான இதயத்துக்கான சக்தியாகும். நடக்க வேண்டிய நல்ல விடயங்கள் நடந்துதான் ஆகவேண்டும்.

ஆன்மிகவாதிகளின் நம்பிக்கைகளே செயற்கரிய செயல்களை எளிமையாக்கி விடுகின்றன. அரைகுறை நம்பிக்கை, தளம்பல்களை உண்டாக்கும். இதனால் பிரயோசனம் இல்லை; பிரச்சினைகளே உருவாகும். இறைவனிடம் உரிமையுடன் கேட்பது, பக்தியின் மறுவடிவம். பெற்றோரிடம் பிள்ளைகள் உரிமையுடன் கேட்கின்றார்கள். பாசத்துடன் பிள்ளைகள் கேட்பதை, பெற்றோர் வழங்கி இன்புறுகின்றார்கள்.

இருக்கும் என எண்ணுவோருக்கு அவை இருக்கும்; இல்லை என்போருக்கு அது இல்லை. கொடுத்தவர்கள் கொடுத்தபடி இருக்கிறார்கள். கடவுளிடம் பேதமில்லை. பேரன்பான கடவுளை நம்புக!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### காத்தான்குடியில் கடலரிப்பு: மீனவர்களுக்கும் கட்டடங்களுக்கும் பாதிப்பு



காத்தான்குடி கடற்கரையில் கடலரிப்பு காரணமாக, அப்பகுதி மீனவர்களுக்கும் கட்டடங்களுக்கும் பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளதாக, மீனவர்களும் பொது மக்களுக்கும் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக, இங்கு கடலரிப்பு ஏற்பட்டு வருவதுடன், காத்தான்குடி கடற்கரையின் ஏத்துக்கால் பகுதியிலேயே, கடலரிப்பு அதிகமாக ஏற்பட்டு வருகின்றது.

இப்பகுதியிலுள்ள மீன்பிடி படகுகள், கரையை அண்மித்த வீதியின் ஓரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளதுடன் அப்பகுதியிலுள்ள சிற்றுண்டிச் சாலைகள், கட்டடங்கள், மரங்கள் என்பவற்றுக்கும் பாதிப்பு ஏற்படும் நிலை காணப்படுகின்றது.

இந்தக் கடலரிப்பால், மீன்பிடி படகுகளை கடலுக்குக் கொண்டு செல்வதிலும் மீனவர்கள் சிரமங்களை சந்தித்து வருகின்றனர். இந்நிலையில், கடலரிப்பைத் தடுக்க கடற்றொழில் திணைக்களமும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென, காத்தான்குடி மீனவர்களும் பொது மக்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

– எம். எஸ். எம் நூர்தீன்

ஜெனீவா

# இன்னொரு முறை ஏமாறுவோமா?



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

மீண்டுமொருமுறை இலங்கை அரசியலில், ஜெனீவா அமர்வுகள் கவனம் பெறுகின்றன. கடந்த ஒரு தசாப்தகாலமாக, ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் அதிலும் குறிப்பாக, புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் ஒரே களமான இருப்பது, ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையாகும்.

குறிப்பாக, இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் தொடர்ச்சியாக, அதனூடு தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுவிட முடியும் என்ற திசைவழியில், தமிழர் அரசியல் பயணித்திருக்கிறது. 'சாண் ஏற முழம் சறுக்கும்' கதையாகிப் போன இந்த முயற்சியின் மீது, இப்போதும் அளவற்ற நம்பிக்கை சூழ்ந்து இருக்கிருக்கிறது.

தமிழருடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, அவர்களுடைய ஒற்றுமையையும் சொந்த ஆற்றலையும் நம்பியிருக்குமாறு அவர்களுடைய தேசியவாதத் தலைமைகள் தமிழரை என்றுமே ஊக்குவிக்கவில்லை. இது பொன்னம்பலம் இராமநாதன் காலம் தொட்டு, வே. பிரபாகரன் காலம் வரை நாம் கண்ட உண்மை.

அதற்குக் காரணங்கள் உள்ளன. ஏனெனில், மக்கள் தமக்காகப் பேசத் தொடங்கிவிட்டால், கேட்கக்கூடாத கேள்விகளைக் கேட்கத் தொடங்கிவிடுவார்கள். அதன் பிறகு, மக்களுடைய பிரச்சினைகள் எவை என வரையறுக்கும் அதிகாரம், மேட்டுக்குடி அரசியல் தலைமைகளுக்கு இருக்காது.

அதுவுமல்லாமல், மேட்டுக்குடி மேலாதிக்கத்தின் ஒவ்வோர் அம்சமும் கேள்விக்கும் எதிர்ப்புக்கும் உட்படத் தொடங்கிவிடும். பிறகு யார் எங்கே இருப்பது என்பதற்குக் கட்டுப்பாடே இல்லாமல், அரசியலின் முகமே மாறிவிடலாம்.

தமிழர் அரசியல், கடந்த நூற்றாண்டில் கணிசமாக ஜனநாயகப்பட்டுள்ளது என்பது உண்மை. ஆனாலும், அந்த ஜனநாயகத்தின் செயற்பாட்டுத் தளம், தேர்தல் அரசியலுக்கு மட்டுப்பட்டே இருந்து வந்தது.

1961ஆம் ஆண்டின் சத்தியாக்கிரகம் முதலாகப் பொங்கி அடங்கி, அழிவில் முடிந்த ஆயுதப் போராட்டம் வரை, எந்த ஒரு தமிழ்த் தேசிய தலைமையும் மக்களை ஒரு போராட்டச் சக்தியாகக் கற்பனை செய்ததில்லை. இப்போது சலுகைகளுக்காகக் கையேந்தும் பிச்சைக்காரர்களாக, மக்களைக் கருதுகிற ஒரு போக்கு வலுப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாகவே, இப்போதைய தமிழ்த் தேசியவாதத் தலைமைகள், தேசிய இனப்பிரச்சினையில் கடைப்பிடிக்கும் அணுகுமுறையை நோக்க வேண்டியுள்ளது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையை, சிங்களவர்-தமிழர் பிரச்சினையாகவே நோக்குகிற போக்கு, இன்னமும் தொடர்கிறது. அமெரிக்காவையும் மேற்குலகையும் ராஜபக்ஷவுக்கு (அதாவது சிங்களவர்களுக்கு) எதிராகப் பயன்படுத்தலாம் என்ற கனவு ஒரு புறமும் இந்திய குறுக்கீட்டைப் பற்றிய மூடநம்பிக்கைகள் இன்னொரு புறமும், அவர்களது இறுதிப் பற்றுக்கோடுகளாக உள்ளன.

இதன் பயனாக, இப்போது மேற்குலகம் நேரடியாகவும் ஐ.நா மூலம் மறைமுகமாகவும் கொடுக்கிற நெருக்குவாரங்களை எல்லாம், தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கிலானவை என்று கருதுகிற ஒரு போக்கு வளர்கிறது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, அதற்கான புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளது. ராஜபக்ஷர்களை போர்க் குற்றங்களுக்காக அமெரிக்கா தண்டிக்கும் என்ற நம்பிக்கை, புலம்பெயர்ந்த தமிழ்த் தேசியவாதிகளிடையே வலுவாக உள்ளது. அதுவே அவர்களுக்குப் போதுமானதாகவும் இருக்கலாம். தமிழகத்தில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களிடையே அது, ஏறத்தாழ ஒரு வெறியாகவே புலப்படுகிறது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், அமெரிக்காவின் ஆணைக்கு உட்படாத, மனித உரிமைகள் மீறல் குற்றவாளிகளைப் பிடிக்க விடுத்துள்ள பிடியாணைகள், மியான்மர் விடயத்தில் சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் என்பன, இலங்கையின் விடயத்திலும் அவ்வாறு நடக்கும் என்ற எதிர்பார்ப்பைத் தூண்டியுள்ளன. அவ்வாறு நடக்கலாம்; நடக்காமலும் போகலாம். ஆனால், அதற்கும் தமிழ் மக்களின் பிரச்சினைகளின் தீர்வுக்கும் ஓர் உறவுமில்லை என்பதை நாம் விளங்கிக் கொள்வது நல்லது.

போர்க் குற்றங்களும் மனித உரிமைகள் மீறல்களும் விசாரிக்கப்படுவது முக்கியமானது. போரின் கொடிய உண்மைகளை, முழுநாடும் அறிவது முக்கியமானது. ஆனால், அந்த விசாரணைகளை யார், ஏன் வலியுறுத்துகிறார்கள் என்பதைப் பற்றிய தெளிவு தேவை.

இதை விடவும், அக்கொடுமைகள் நிகழ, முழு உடந்தையாக இருந்த நாடுகள் எவை எனவும் அனைத்தும் நடக்கையில் பார்த்திருந்து விட்டு, இப்போது மனித உரிமைகள் மீறல், போர்க்குற்றங்கள் என்று பாசாங்கு செய்கிற நாடுகள் எவை எனவும் நினைவூட்டத் தமிழ்த் தலைமைகள் விரும்ப மாட்டா. இச்சூழலில், தமிழ் மக்களையும் முழு நாட்டையும் எதிர்நோக்குகின்ற உடனடி, நீண்ட கால அபாயங்கள் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

இலங்கையில் இப்போது ஜனநாயகமும் கருத்துச் சுதந்திரமும் பெரும் மிரட்டலுக்கு உட்பட்டுள்ளன. மோசமடைந்து வரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க இயலாமல், அரசாங்கம் நாட்டை மேலும் கடனாளியாக்கி, சர்வதேச நாணய நிதியத்தின் ஆணைகளுக்குப் பணிந்து, மக்கள் மீது சுமைகளை ஏற்றுகிறது.

பயங்கரவாதத்தைக் காட்டி, மக்களை 'ஏய்ப்பது' இனிக் கடினம். மக்களின் எதிர்ப்பைச் சமாளித்து, திசைதிருப்பப் பேரினவாத அரசியல் மட்டும் போதாது. எனவே, நேரடியான அடக்குமுறை தேவை. அதை நாம் இன்று பல இடங்களிலும் கண்டுள்ளோம்.

இப்பின்புலத்திலேயே ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரது அண்மைய கருத்துகளை நோக்க வேண்டியுள்ளது. உண்மையைக் கண்டறிதல், பொறுப்புக்கூறல் என்று தோற்றம் பெற்ற இலங்கை மீதான பிரேரணை, தொடர்ச்சியாக அதன் உள்ளடக்கத்திலும் அறிக்கையிடலிலும் மாற்றமடைந்து வந்துள்ளது.

மேற்குலகத்துக்கு உவப்பில்லாத அரசாங்கம், இலங்கையில் பதவியில் இருந்தபோது, இறுதிப் போரில் நடைபெற்ற விடயங்களே கூடிய முக்கியத்துவம் பெற்றன. ஆனால், காலப்போக்கில் கவனம், இலங்கையின் பொதுவான மனித உரிமைகள் பற்றியதாக மாறியது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடுத்து, அது குறித்த உண்மைகள், இலங்கை தொடர்பான அறிக்கையின் முக்கிய பேசுபொருளாகின.

இதன் தொடர்ச்சியாகவே, செவ்வாய்க்கிழமை (06) வெளியாகிய அறிக்கையை நோக்க வேண்டியுள்ளது. இது, இலங்கையின் பொருளாதாரக் குற்றங்கள் பற்றிப் பேசுகிறது. அவ்வறிக்கை, 'நிலையான முன்னேற்றங்களை அடைவதற்கு, கடந்த கால மற்றும் தற்போதைய மனித உரிமைகள் மீறல்கள், பொருளாதாரக் குற்றங்கள், உள்ளூர் ஊழல்களுக்கான தண்டனை உட்பட, பொருளாதார நெருக்கடிக்குப் பங்களித்த அடிப்படைக் காரணிகளை அடையாளம் கண்டு, நிவர்த்தி செய்வது இன்றியமையாதது' என்று தெரிவிக்கிறது.

16 பக்கங்கள் நீள்கின்ற இந்த நீண்ட அறிக்கையின் நிறைவுரையில், இரண்டு விடயங்கள் வலியுறுத்தப்படுகின்றன. அவை, இலங்கை மீதான தீர்மானத்தின் மாறும் இயல்பையும் அதன் இன்றைய நிலையையும் அடிக்கோடிட்டுக்காட்ட வல்லன.

'இலங்கை ஒரு பேரழிவுகரமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறது. இது மக்களின் வாழ்க்கையை கடுமையாகப் பாதிக்கிறது. இலங்கையை மீட்பதற்கு சர்வதேச சமூகம் ஆதரவளிக்க வேண்டும்' என உயர்ஸ்தானிகர் வலியுறுத்தியுள்ளார்.

எவ்வாறாயினும், நிலையான முன்னேற்றத்துக்கு, கடந்த கால மற்றும் தற்போதைய மனித உரிமைகள் மீறல்கள், பொருளாதாரக் குற்றங்கள், ஊழல்களுக்கான தண்டனை உட்பட, இந்த நெருக்கடிக்கு பங்களித்த அடிப்படை காரணிகளை அடையாளம் கண்டு, இலங்கைக்கு உதவுவது இன்றியமையாததாகும்.

அனைத்து சமூகங்களிலிருந்தும் பொறுப்புக்கூறல், ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான பரந்த அடிப்படையிலான கோரிக்கைகள் எதிர்காலத்துக்கான புதிய மற்றும் பொதுவான பார்வைக்கான ஒரு முக்கியமான தொடக்கப் புள்ளியை முன்வைக்கின்றன. பொறுப்புக்கூறல், சட்டத்தின் ஆட்சி, பாகுபாடு காட்டாமை, மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் ஆகியவற்றின் அடிப்படையில், இலங்கையை எவ்வாறு, பன்மைத்துவ மற்றும் முழுமையான ஜனநாயக நாடாக மாற்றுவது என்பது குறித்த புதிய அர்த்தமுள்ள தேசிய உரையாடலுக்கான வாய்ப்பு இருப்பதாக உயர்ஸ்தானிகர் நம்புகிறார்.

இந்தப் பின்புலத்தில், கடந்தகால வரலாற்றை ஒருமுறை மீள நினைவூட்டல் தகும். தேசிய இனப்பிரச்சினையின் தீர்வின்மையின் பயனான கொடிய போராலேயே, போர்க் குற்றங்களும் மனிதவுரிமை மீறல்களும் நிகழ்ந்தன. போர் முடிந்து மூன்று ஆண்டுகளாகியும், அரசியல் தீர்வு நிராகரிப்பும் ஜனநாயக மறுப்பும் மனிதவுரிமை மீறல்களுமே காணக்கிடைத்த நிலையிலேயே, ஐ.நா தனது நிபுணர் குழு அறிக்கையின் அடிப்படையில், இலங்கையின் விடயத்தை மனித உரிமைகள் பேரவை நிகழ்ச்சி நிரலுக்குள் புகுத்தியது. அதில் அமெரிக்காவின் பங்கும் பெரியது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து, மக்களிடையே நல்லெண்ணத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தவோ தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவோ வேண்டி அமெரிக்கா, ஜெனீவா தீர்மானத்துக்குப் பின்னிருந்து முழுமூச்சாகச் செயற்படவில்லை. இலங்கை மீதான பிடியை வைத்திருப்பதற்கான ஒரு கருவியாகவே, அன்றிலிருந்து இன்றுவரை இத்தீர்மானம் செயற்படுகிறது.

இந்தப் பின்னணியில், ஜெனீவாவில் நடந்தவையும் நடப்பவையும் தமிழர்களின் நன்மைக்காக என்று நம்புபவர்கள், ஏமாற்றப்படுவதையே, தமது கடந்த காலமாகவும் எதிர்காலமாகவும் கொண்டிருக்க ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

One Galle face mallஇல் 5G அனுபவங்களை

# பகிர்ந்தது SLT-MOBITEL

SLT-MOBITEL, கொழும்பு one Galle-face Mall கிளையில் வாடிக்கையாளர்களுக்கு 5G அனுபவத்தை பெற்றுக் கொள்ளும் நிகழ்வை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் பொது மக்களுக்காக பரந்தளவு 5G தொழில்நுட்ப வெளிப்படுத்தல் சேவைகள், Virtual Reality, 5G Gaming, remote vehicle control, HD video streaming போன்ற பல அம்சங்கள் அடங்கியிருந்தன. இவற்றினூடாக, அதியுயர் வேகங்களுக்கு மேலதிகமாக 5G தொழில்நுட்பத்தின் திறன்கள் பற்றிய விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன. பிரதான நகரங்களில் தினசரி வாழ்க்கையில் 5G ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துள்ள நிலையில், தனது வணிக அறிமுகத்துக்கு முன்னரான பரீட்சார்த்த வலையமைப்பு பகுதிகளை கொழும்பு, கண்டி, அநுராதபுரம், காலி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதான நகரங்களில் SLT-MOBITEL மேலும் விரிவாக்கம் செய்துள்ளது. இதனூடாக, வாடிக்கையாளர்களுக்கு 5G தொழில்நுட்பத்தை மொபைல் புரோட்பான்ட் ஊடாகவும், நிலையான வயர்லஸ் அணுகல் டொமெயின்களினூடாகவும் பயன்படுத்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

https://5g.sltmobitel.lk எனும் இணையப் பகுதிக்கு விஜயம் செய்து, SLT-MOBITEL வாடிக்கையாளர்களுக்கு தமது சாதனத்தின் 5G தகுதி, ஆற்றல் மற்றும் மேலதிக தகவல்களை பரிசோதித்துக் கொள்ள முடியும்.

2019ஆம் ஆண்டு முதல், SLT-MOBITEL இனால் நாடு முழுவதிலும் 5G வலையமைப்பு பற்றிய விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. 2019 ஏப்ரல் மாதத்தில் SLT-MOBITEL இனால், தெற்காசியாவின் முதலாவது மொபைல் வலையமைப்பினூடான 5G பரீட்சார்த்த நிறுவுகை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. திறன்பேசி ஒன்றை 5G வலையமைப்புடன் இணைத்து அதிவேக இணைப்புகள் பதிவு செய்யப்பட்டிருந்தது. வயர்லஸ் தொடர்பாடலின் அடுத்த தலைமுறையாக 5G அறியப்படுகின்றது. இதில் அதிவேகம், பாரிய இணைப்புத்திறன் மற்றும் புதிய உள்ளடக்கமான அனுபவங்கள் போன்றவற்றுடன் HD video streaming, virtual reality, factory automation, remote operations, mission-critical communications, massive IOT, smart home & smart city கொள்கைகள் மற்றும் விறுவிறுப்பான மேலும் பல வரையறைகளற்ற அம்சங்கள் நுகர்வோர்களுக்காகவும், வியாபாரங்களுக்காகவும் அடங்கியுள்ளன.

இலங்கையில் வணிக ரீதியிலான 5G வலையமைப்பு அனுமதியை வழங்கும் பணிகளை இலங்கை தொலைத்தொடர்பாடல்கள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) மேற்கொண்ட வண்ணமுள்ளதுடன், அவசியமான அனுமதியை SLT-MOBITEL பெற்றுக் கொண்டதும், தனது 5G வலையமைப்பை மேலும் விரிவாக்கம் செய்யும் பணிகளை முன்னெடுக்கும். அதனூடாக, டிஜிட்டல் மேம்படுத்தல்களினூடாக, உள்ளடக்கமான டிஜிட்டல் பொருளாதாரத்துக்கும் பங்களிப்பு வழங்கப்படும்.





இலங்கையில் சிறுவர்களின் நெருக்கடி நிலை:

## தெற்காசியாவுக்கு ஓர் எச்சரிக்கை

**தெற்காசியாவின் யுனிசெப் பிராந்திய பணிப்பாளர் ஜோர்ஜ் லார்யா-அட்ஜெயின்**



இலங்கையில் பொருளாதார நெருக்கடி தொடர்ந்தும் சிக்கல் தருகின்ற நிலையில் வறிய, மிகவும் பாதிப்புக்குள்ளான சிறுமியரும் சிறுவருமே, அதன் பாதிப்பை அனுபவிக்கின்றனர்.

'துரித பொருளாதார வளர்ச்சி மற்றும் பெருகும் சுற்றுலாத்துறைக்காக பெயர் போன நாடான இலங்கையானது, 1948 சுதந்திரத்துக்குப் பின்னரான மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியை அனுபவிக்கின்றது. அத்தியாவசிய உணவுகளைப் பெற்றுக் கொள்ள முடியாமையால், பல குடும்பத்தினர் தமது வழக்கமான உணவைத் தவிர்த்து வருகின்றனர். சிறுவர்கள் பட்டினியுடன் தூக்கத்துக்குச் செல்கின்றனர். தீவிரமான ஊட்டச்சத்துக் குறைபாட்டில், தெற்காசியாவில் இரண்டாவது உயர் விகிதத்தைக் கொண்டுள்ள நாட்டில், எப்போது அவர்களுக்கான அடுத்த வேளை உணவு கிடைக்கும் என்பதில் உறுதியில்லை.

இலங்கையில் சுமார் இரண்டில் ஒரு சிறுவருக்கு ஏதாவது ஒரு வடிவிலான அவசரகால உதவி தேவையாக இருக்கின்றது. இரண்டு வருடங்கள் தடைப்பட்ட கற்றல் நடவடிக்கையால் ஏற்கெனவே பாதிக்கப்பட்டுள்ள 4.8 மில்லியன் சிறுவர்களின் கல்வியானது, பாடசாலை வருகை தொடர்ந்தும் குறைவாக இருப்பதால் மேலும் பாதிப்புக்குள்ளாகும் ஆபத்தில் உள்ளது.

சிறுவர்களின் பாடசாலை நடவடிக்கைகள், தற்போதுள்ள நெருக்கடியால் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நெருக்கடிக்கு முன்பதாக அவர்கள் உட்கொண்ட சூடான மற்றும் ஊட்டச்சத்து மிக்க உணவு அவர்களுக்கு கிடைப்பதில்லை. அவர்களுக்குத் தேவையான அடிப்படையான கற்றல் உபகரணங்கள் இல்லை. ஆசிரியர்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

உயர்ந்து செல்லும் பொருளாதார அழுத்தம் காரணமாக, சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம், சுரண்டல், வன்முறைச் சம்பவங்களின் அதிகரிப்பு தொடர்பான அதிக அறிக்கைகளை காண்கின்றோம். இலங்கையில் ஏற்கெனவே 10,000இற்கும் அதிகமான சிறுவர்கள் நிறுவனம்சார் கட்டமைப்பின் பராமரிப்பில் இருக்கின்றனர். இதற்கான பிரதான காரணம் வறுமையாகும். சிறுவர்கள் வளர்வதற்கான மிகப் பொருத்தமான இடமாக அவை இருப்பதில்லை. ஏனெனில், அதில் குடும்ப உறவுக்கான சாத்தியம் இருப்பதில்லை. துரதிர்ஷ்டவசமாக, தம்மால் பராமரிக்கவும் உணவளிக்கவும் முடியாத நிலையில், மேலும் பல குடும்பங்கள் தமது பிள்ளைகளை இந்த நிறுவனம்சார் கட்டமைப்புக்குள் சேர்ப்பதற்கு இந்த நெருக்கடி வழிவகுத்துள்ளது.

இலங்கையில் தற்போதைய நிலை தொடருமாயின், கடும் உழைப்பின் மூலம் பெறப்பட்ட சிறுவர்களுக்கான நன்மைகளானவை, முழுமையாக அழிக்கப்படும் ஆபத்து நிலையில் உள்ளது.

ஐம்பதுக்கும் மேற்பட்ட வருடங்களாக யுனிசெப் நிறுவனமானது, இலங்கையில் செயற்பட்டு வருகின்றது. பங்காளர்களின் ஆதரவுடன், கற்றல் உபகரணங்களை வழங்கி வருகிறது.

முன்பள்ளி சிறுவர்களுக்கான உணவுகளை வழங்கிவருகின்றது. அத்துடன், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார் ஆகியோருக்கு மிக அவசியமாகத் தேவைப்படும் பொருட்களுக்கான பணத்தையும் வழங்கி வருகின்றது. ஆனாலும், நெருக்கடி தொடர்வதால், தேவை அதிகமான உள்ளது.

நெருக்கடியைத் தீர்ப்பதற்கு நாடு முயற்சித்து வரும் நிலையில், தீர்வின் முக்கிய இடத்தில் சிறுவர்கள் வைக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. அனைத்து வயதுப் பிரிவுகளையும் சேர்ந்த சிறுமியர், சிறுவர்களுக்கான தொடர்ச்சியான கல்வி, உறுதி செய்யப்படல் வேண்டும். அப்போதுதான், அவர்கள் தமது எதிர்காலத்துக்கானத் தயாராக முடியும் என்பதுடன், சிறுவர் தொழிலாளர், சுரண்டல், பால்நிலை அடிப்படையிலான வன்முறை போன்ற ஆபத்துகளில் இருந்து தம்மைக் காத்துக் கொள்ள முடியும்.

உயிர் ஆபத்துள்ள நோய்கள், ஊட்டச்சத்து குறைபாடு போன்றவற்றில் இருந்து பெண்களையும் சிறுவர்களையும் பாதுகாப்பதற்கு, மத்திய மற்றும் சமுதாயம் சார்ந்த சுகாதார சேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

இலங்கையில் யுனிசெப் கண்டது, தெற்காசியாவின் ஏனைய நாடுகளுக்கான எச்சரிக்கைக் கதையாகும்.


சென்னை

# எல்லை மீறும் குறும்பு வீடியோக்கள்

குறும்பு வீடியோக்களை (பிராங்க்) வெளியிடும் யூடியூப் சேனல்களை முடக்கி, கைது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சென்னை பொலிஸ் தலைமையகத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் யூடியூப் சேனல்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என ரோகித் என்பவர் புகார் அளித்துள்ளார்.

அதில், முதியோர்கள், பெண்களை துன்புறுத்தும் வகையில் சில யூடியூப் சேனல்கள் 'பிராங்க்' வீடியோக்களை எடுத்து வருவதாக தெரிவித்துள்ளார்.

இதனால், தமிழ்க் கலாசாரம் சீரழிந்து, பலர் மனஉளைச்சலுக்கு தள்ளப்படுவதாகவும், இதுபோன்ற சேனல்களை உடனடியாக நீக்கி சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்ய வேண்டும் எனவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உத்தரப்பிரதேசம்

## டிஜிட்டல் பாலியல் வன்கொடுமை முதியவருக்கு ஆயுள் தண்டனை



மூன்று வயது சிறுமியை டிஜிட்டல் பாலியல் வன்கொடுமை செய்த 65 வயதான முதியவருக்கு போக்சோ வழக்கில் ஆயுள் தண்டனை அளித்து நீதிமன்றம் தீர்பளித்துயுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் சாலர்புல் கிராமத்தில் வசிக்கும் மூன்று வயது சிறுமியை மேற்கு வங்காள பகுதியைச் சேர்ந்த 65 வயதான முதியவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, டிஜிட்டல் பாலியல் வன்கொடுமை செயலில் ஈடுபட்டதாகத் தொடர்ந்த வழக்கில், தற்போது நீதிமன்றம் அந்த முதியவருக்கு ஆயுள் தண்டனை அளித்துத் தீர்ப்பளித்துள்ளது.

தனது மகள் வீட்டுக்கு 2019ஆம் ஆண்டில் வந்துள்ளார். அப்போது வீட்டின் வெளியே விளையாடிக்கொண்டிருந்த மூன்று வயது சிறுமியைச் சாப்பிடுவதற்கு இனிப்பு கொடுப்பது போல் கொடுத்து, சிறுமியை யாரும் இல்லாத போது வீட்டிற்குள் அழைத்துச் சென்று இந்தச் செயலை செய்துள்ளார்.

சிறுமி அழுதுகொண்டே இதனைப் பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். உடனே சிறுமியின் பெற்றோர் முதியவர் மேல் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பெயரில் கைதுசெய்யப்பட்ட முதியவருக்கு தற்போது நீதிபதி, ஆதாரம் மற்றும் எட்டு சாட்சிகள் அடிப்படையில் போக்சோ வழக்கில் 'டிஜிட்டல் பாலியல் வன்கொடுமை' என்று குறிப்பிட்டு அவருக்கு ஆயுள் தண்டனை அளித்துள்ளார்.

டிஜிட்டல் பாலியல் கொடுமை என்றால், டிஜிட்டல் முறையில் தகாத செயல்களில் ஈடுபடுவது அல்லது சைபர் கிரைம் கிடையாது. டிஜிட்டல் பாலியல் வன்கொடுமை என்பது, ஒருவரின் அந்தரங்க உறுப்பில் சம்பந்தப்பட்டவரின் அனுமதியின்றி கை மற்றும் கால் விரல்களை நுழைப்பது. ஆங்கிலத்தில் 'டிஜிட்' என்பது விரல்களைக் குறிக்கிறது.

2012ஆம் ஆண்டு முன்பு வரை, இந்தச் செயலுக்கு பாலியல் வன்கொடுமை என்ற வார்த்தை கிடையாது. இதனை 'மோளேஸ்டேஷன்' அதாவது கைகளால் அடுத்தவரின் அந்தரங்க உறுப்புகளைத் தடவுவது என்றே குறிப்பிடப்பட்டு இருந்தது.

2013ஆம் ஆண்டில் புதுடெல்லியில் நடந்த கொடூர பாலியல் சம்பவமான நிர்பயா கற்பழிப்பு வழக்குக்குப் பின்னர், இந்த 'டிஜிட்டல் பாலியல் வன்கொடுமை' என்ற வார்த்தை இந்தியாவின் பாலியல் பலாத்காரம் சட்டத்தில் பாலியல் குற்றம் என்று சேர்க்கப்பட்டது.

கடந்த ஆண்டுகளில், டிஜிட்டல் பாலியல் வன்கொடுமை வழக்கில் சிலர் கைதுசெய்யப்பட்ட போதிலும் இந்தத் தீர்ப்பே டிஜிட்டல் பாலியல் வன்கொடுமை வழக்கில் ஆயுள் தண்டனை கொடுத்த முதல் வழக்கு ஆகும்.

பெங்களூர்

## சென்னை மத்திய சிறைக்கு 3வது இடம்

சுகாதாரம், பராமரிப்பு ஆகிய பிரிவுகளின் கீழ்நாட்டிலேயே சிறந்த சிறையாக, தமிழகத்தின் சென்னை மத்திய சிறைக்கு மூன்றாவது இடமும் பெங்களூர் அக்ரஹாரா சிறைக்கு முதல் இடமும் கிடைத்துள்ளது.

இந்திய பொலிஸ் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணி அதிகாரிகள், இந்தியா முழுவதும் உள்ள சிறைகளுக்கு சென்று சிறைகளின் நிலை, சுகாதாரம், பராமரிப்பு ஆகியவற்றை ஆய்வு செய்து சிறந்த சிறைகளைத் தேர்வு செய்தனர். இதில் இந்தியா முழுவதும் இருந்து 1,319 சிறைகளின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தமிழகத்தின் சென்னை மத்திய சிறை மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது. இது, இந்தியாவின் பழைமையான சிறைகளுள் ஒன்று. இந்தியாவின் சிறந்த சிறையாக பெங்களூர், பரப்பன அக்ரஹாரா சிறை முதலாவது இடத்தை பிடித்துள்ளது.

சென்னை

ஒன்லைன் சூதாட்டத்தை தடை செய்ய

## அவசர சட்டம் தேவை

**அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்**



ஒன்லைன் சூதாட்டத்தை தடை செய்ய அவசர சட்டத்தை தாமதிக்காமல் பிறப்பிக்குமாறு பாட்டாளி மக்கள் கட்சியின் (பா.ம.க) தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், சேலம் மாவட்டம் ஆத்தூர் சதாசிவபுரம் பகுதியைச் சேர்ந்த பொறியியல் கல்லூரி மாணவர் சூரியபிரகாஷ் ஒன்லைன் சூதாட்டத்தில் ரூ.75,000 இழந்ததால் விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார். தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள அவரது நிலைமை ஆபத்தான கட்டத்தில் உள்ளது.


சூரியபிரகாஷ், கல்லூரிக் கட்டணம் செலுத்துவதற்காக வைத்திருந்த பணத்தை சூதாடி இழந்திருக்கிறார் என்பதிலிருந்து ஒன்லைன் சூதாட்டம் மாணவர்களையும் அடிமையாக்கியுள்ளது. கல்லூரிக் கட்டணத்துக்கான பணத்தை வைத்து சூதாடும் அளவுக்கு போதையாக்கி உள்ளது என்பதை அறியலாம்.

ஒன்லைன் சூதாட்டத்துக்கு அடிமையாகி, கடந்த ஓராண்டில் 28 பேர் உயிரிழந்துள்ளனர். இப்போது ஒரு தற்கொலை முயற்சியும் நடந்துள்ளது. இவ்வளவுக்குப் பிறகும் ஒன்லைன் சூதாட்டத் தடை அவசர சட்டம் பிறப்பிக்கப்படவில்லை என்றால், மக்களைக் காக்க அரசுக்கு மனம் இல்லையா? என்ற வினா எழுகிறது என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

நெல்லூர்

## சிறுமி வாயில் ஆசிட் ஊற்றி கொலை செய்ய முயற்சி

**தாய்மாமனுக்கு வலை**



ஆந்திர மாநிலம் நெல்லூரில் உள்ள குஜகுஜத் நரிக்குறவர் கொலனியை சேர்ந்த தம்பதியினரின் 14 வயது மகள், அதே பகுதியில் உள்ள பாடசாலையில் படித்து வருகிறார். சிறுமியின் பெற்றோர் பணி நிமித்தம், வெளியே சென்றிருந்த நிலையில், சிறுமி மட்டும் தனியாக வீட்டில் இருந்துள்ளார். இதனை அறிந்த சிறுமியின் தாய்மாமன், மது அருந்திவிட்டு வந்து, சிறுமியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த சிறுமி, கழிவறைக்கு சென்று கதவை மூட முயன்றபோது, கதவை உடைத்துக்கொண்டு உள்ளே சென்ற தாய்மாமன், கத்தியால் சிறுமியின் கழுத்தை அறுத்ததோடு மட்டுமின்றி, அங்கிருந்த ஆசிட்டை எடுத்து சிறுமியின் வாயில் ஊற்றியுள்ளார். சிறுமியின் அலறல் சத்தம் கேட்டு வந்த அக்கம்பத்தினர், சிறுமியை மீட்க முயற்சித்த போது, சிறுமிக்கு உதவுவது போல் தாய்மாமன் நாடகமாடியுள்ளார்.

அதனையடுத்து அவர் தப்பியோடவும் முயன்றுள்ளார். எனினும், அவரை பொதுமக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சுவிட்சர்லாந்து



# எரிவாயு பயன்படுத்தினால் சிறை

அண்மைக்காலமாக சுவிட்ஸர்லாந்தில் எரிவாயு தட்டுப்பாடு அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் குளிர்காலத்தை சமாளிக்க நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் எரிவாயு குறித்த விதிமுறைகளை மீறும் நபர்களுக்கு சிறை தண்டனை அளிக்க சுவிட்ஸர்லாந்து அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி விதிமுறைகளை மீறும் நபர்களுக்கு மூன்று வருடங்கள் சிறைத்தண்டனை அல்லது அபராதங்கள் விதிக்கப்படலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் விதிமுறைகளின் படி, எரிவாயு மூலமாக கட்டடங்களை வெப்பமாக்கும் வசதியுடைய பகுதிகளில் அதிகமாக 19 பாகை செல்சியஸ் வரை வெப்பப்படுத்திக் கொள்ளலாம்.

அதற்கு மேல் பயன்படுத்தக் கூடாது. மேலும் நீரை 60 பாகை செல்சியஸ் வரை வெப்பப்படுத்திக் கொள்ளலாம். இந்த விதிமுறைகளை மீறுவோரை, 30 சுவிஸ் பிராங்குகளிலிருந்து, 3,000 சுவிஸ் பிராங்குகள் வரை அபராதம் செலுத்த வேண்டியிருக்கும் என்று பெடரல் நீதித்துறை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

கொங்கோ



## திறப்பு விழாவிலேயே உடைந்து விழுந்த பாலம்

கொங்கோவில் மழைக்காலங்களில் மக்கள் பாதுகாப்பான முறையில் ஆற்றை கடந்து செல்வதற்காக அண்மையில் புதிய பாலமொன்று கட்டப்பட்டது

குறித்த பாலத்தின் திறப்பு விழாவின் போது, அப்பாலம் அனைவரது முன்னிலையிலும் உடைந்து விழுந்த சம்பவம் மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எனினும் இவ் விபத்தின் போது அங்கிருந்தவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

பிரான்ஸ்

## இப்படியொரு சிக்கன நகரமா?

பிரான்ஸில் சில நகரகள் மின்சாரத்தை சேமிக்க தாமாகவே முன்வந்து பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அந்த வகையில் Lyon நகரில் கட்டடங்கள், பாலங்கள், தேவாலயங்களில் இருக்கும் அலங்கார விளக்குகளை வாரத்தில் மூன்று நாள்களுக்கு மட்டுமே ஒளிர செய்வதாகவும் அது, மக்கள் நடப்பதற்கும், வழிப்பாதை தெரிவதற்கும் மட்டுமே எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் எல்இடி விளக்குகள் குறைந்த அளவிலான மின்சாரத்தையே பயன்படுத்துவதால், அந் நகரில் இருக்கும் கடைகள் எல்இடி விளக்குகயேயே அதிகளவில் பயன்படுத்தி வருவதாகவும், பகல் நேரங்களில் இருக்கும் வெளிச்சத்தை பொறுத்து, தாமாகவே அணைந்து விடும் விதத்தில் சென்சார் வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்கா



## காத்திருந்தவருக்கு கிடைத்த எலும்பு துண்டுகள்

அமெரிக்காவில் நபர் ஒருவர் 'டோர் டேஸ்ட்' என்ற செயலி மூலமாக இறைச்சி உணவொன்றை ஓடர் செய்து விட்டு பசியுடன் காத்திருந்துள்ளார்.

இந்நிலையில் ஓடர் செய்த சிறிது நேரத்தில் அவரது வீட்டிற்கு குறித்த உணவுப் பொதி வந்துள்ளது.

இதனையடுத்து அதனை ஆர்வத்துடன் திறந்த அவர் அதற்குள் எலும்பு துண்டுகளுடன், ஒரு கடிதம் இருந்துள்ளதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

மேலும் குறித்த கடிதத்தில், 'ஃப்ரைட் சிக்கனுடன் உங்களுக்கு டெலிவரி செய்ய வந்து கொண்டிருந்தேன்.ஆனால் எனக்கு மிகுந்த பசி ஏற்பட்டதால் அதை உண்டுவிட்டேன். எலும்பை உங்களுக்கு அனுப்பி விட்டேன். என்னிடம் பணம் இல்லை' என்று எழுதி இருந்தார்.

இக் கடிதத்தைப் பார்த்த வாடிக்கையாளர் கடும் கோபமடைந்து இது குறித்து ஸ்டமர் கேரில் புகார் அளித்துள்ளார்.

இதன் போது குறித்த நபர் அந்த நிறுவனத்தில் பணிபுரிந்து டெலிவரி செய்த கடைசி பார்சல் அதுதான் எனவும், அவர் வேலையை விட்டு நின்று விட்டார் எனவும் இதனாலேயே அவர் தைரியமாக இப்படி ஒரு காரியத்தை செய்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது

இதை தொடர்ந்து பாதிக்கப்பட்ட நபர் இது குறித்து வழக்கு பதிவு செய்த நிலையில், அவருக்கு பணமும் ஃப்ரைட் சிக்கனும் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா

25 ஹொலிவூட் பிரபலங்களுக்கு

## ரஷ்யா நிரந்தர தடை


உக்ரேன் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் முதல் தீவிரமாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது. இதனால் ரஷ்யாவுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகள் பல்வேறு வகைகளில் பொருளாதார தடைகளை விதித்து வருகின்றன.

அதே சமயம் அமெரிக்காவைச் சேர்ந்த ஹொலிவூட் நடிகர் பென் ஸ்டில்லர் உள்ளிட்ட 25 பிரபலங்கள், கடந்த சில நாள்களாக உக்ரேன் ஜனாதிபதியைச் சந்தித்து வருகின்றனர்.

இதனால் ஆத்திரமடைந்த ரஷ்யா, குறித்த 25 பிரபலங்களும் ரஷ்யாவுக்குள் நுழைவதற்கு நிரந்தர தடை விதித்துள்ளது.

**“ ரஷ்ய மக்களுக்கு எதிராக அமெரிக்கா பல வகைகளில் தடைகளை விதித்து வருகிறது. இந்நிலையில் ஹொலிவூட் நடிகர்கள் உக்ரேனுக்கு சென்றுள்ளனர். இதனால் அவர்கள் ரஷ்யாவுக்குள் நுழைவதற்கு நிரந்தர தடை விதிக்கப்படுகிறது**

இதுகுறித்து ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'ரஷ்ய மக்களுக்கு எதிராக அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடன் பல வகைகளில் தடைகளை விதித்து வருகிறார். இந்நிலையில் ஹொலிவூட் நடிகர்கள் உள்ளிட்ட 25 பிரபலங்கள் உக்ரேனுக்கு சென்று



அந்நாட்டு ஜனாதிபதி செலன்ஸ்கியை சந்தித்துள்ளனர். இதனால் அவர்கள் ரஷ்யாவுக்குள் நுழைவதற்கு நிரந்தர தடை விதிக்கப்படுகிறது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் உக்கிரேனுக்கு சென்ற பிரபலங்களை ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, “ஆபத்தான நிலையிலும் எங்கள் நாட்டுக்கு வருகை தந்தமைக்கு மிக்க நன்றி” எனத் தெரிவித்துள்ளார்.



ஆசிய கிண்ணம்:

# இறுதி போட்டியில் இலங்கை, பாகிஸ்தான்

ஆசியக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு இலங்கையும், பாகிஸ்தானும் தகுதி பெற்றுள்ளன.

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஆப்கானிஸ்தானுடனான சுப்பர் 4 சுற்றுப் போட்டியில் பாகிஸ்தான் வென்றமையைத் தொடர்ந்தே இலங்கையும், பாகிஸ்தானும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

இதேவேளை, நடப்புச் சம்பியன்களான இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியவை தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளன.

சுப்பர் 4 சுற்றில் நான்கு அணிகளும் தலா இரண்டு போட்டிகளில் விளையாடியுள்ள நிலையில் இலங்கையும், பாகிஸ்தானும் இரண்டிலும் வென்றுள்ள நிலையில், இந்தியாவும், ஆப்கானிஸ்தானும் இரண்டிலும் தோற்றுள்ளன. ஆகையால் மீதவுள்ள அனைத்து அணிகளினதும் எஞ்சிய போட்டியானது இறுதிப் போட்டிக்கான தகுதியில் எவ்வித தாக்கத்தையும் செலுத்தாது.

மேற்குறிப்பிட்ட போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தானின் அணித்தலைவர் பாபர் அஸாம், தனதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான், 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், இப்ராஹிம் ஸட்ரான் 35 (37), ஹஸரத்துல்லா ஸஸாய் 21 (17), ரஷீட் கான் ஆட்டமிழக்காமல் 18 (15), ரஹ்மனுல்லா குர்பாஸ் 17 (11) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஹரிஸ் றாஃப் 2/26 [4], நசீம் ஷா 1/19 [4], மொஹமட் நவாஸ் 1/23 [4], ஷடாப் கான் 1/27 [4], மொஹமட் ஹஸ்னைன் 1/34 [4] என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 130 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், முதலாவது ஓவரிலேயே அஸாமை பஸல்ஹக் பரூக்கியிடம் இழந்ததுடன், சிறிது நேரத்தில் பக்கர் ஸமன் ரண் அவுட்டானார். பின்னர் குறிப்பிட்ட நேரத்தில் 20 (26) ஓட்டங்களுடன் ரஷீட்டிடம் மொஹமட் றிஸ்வான் வீழ்ந்தார்.

இதையடுத்து இனிங்ஸை நகர்த்திச் சென்ற இஃப்திஹார் அஹ்மட் 30 (33) ஓட்டங்களுடனும், ஷடாப் கான் 36 (26) ஓட்டங்களுடனும் அடுத்தடுத்த ஓவர்களில் பரீட் அஹ்மட், ரஷீட்டிடம் வீழ்ந்தனர். அடுத்த ஓவரில் நவாஸும், குஷ்டில் ஷாவும் பரூக்கியிடம் வீழ்ந்ததோடு, அதற்கடுத்த ஓவரில் றாஃப், 16 (08) ஓட்டங்களைப் பெற்ற ஆசிஃப் அலி அஹ்மட்டிடம் வீழ்ந்தனர்.

இறுதி ஓவரில் 11 ஓட்டங்கள் தேவையாக இருக்க, முதலிரண்டு பந்துகளிலேயே நசீம் ஷா பெற்ற அடுத்தடுத்த ஆறு ஓட்டங்களால் 19.2 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை பாகிஸ்தான் அடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஷடாப் கான் தெரிவானார்.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள இறுதி சுப்பர் 4 சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டிக்கு முன்பதாக இலங்கையும், பாகிஸ்தானும் மோதவுள்ளதுடன், நாளை மறுதினம் நடைபெறவுள்ள இறுதிப் போட்டியிலும் இரண்டு அணிகளும் இதே நேரத்துக்கு பலப்பரீட்சை நடாத்தவுள்ளன.

ஆரையம்பதியில் விளையாட்டு கழகங்களுக்கு

## விளையாட்டு உபகரண தொகுதிகள் வழங்கி வைப்பு

எம்.எஸ்.எம். நூர்தீன்

மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் இயங்கி வரும் விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணத் தொகுதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வானது அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரனின் நிதி ஒதுக்கீட்டில் பிரதேச செயலகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணத் தொகுதிகள், கருணாகரன் உள்ளிட்ட அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டது.





நியூசிலாந்துக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியா

நியூசிலாந்துக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் அவுஸ்திரேலியா வென்றிருந்த நிலையில், இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையில் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

அவுஸ்திரேலியா: 195/9 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஸ்டீவ் ஸ்மித் 61 (94), மிற்செல் ஸ்டார்க் ஆ.இ 38 (45), கிளென் மக்ஸ்வெல் 25 (50), ஜொஷ் ஹேசில்வூட் ஆ.இ 23 (16), அடம் ஸாம்பா 16 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: ட்ரெண்ட் போல்ட் 4/38 [10], மற் ஹென்றி 3/33 [10], மிற்செல் சான்ட்னெர் 1/22 [7], டிம் செளதி 1/39 [10])

நியூசிலாந்து: 82/10 (33 ஓவ. ) (பந்துவீச்சு: அடம் ஸாம்பா 5/35 [9], ஷோன் அபொட் 2/1 [5], மிற்செல் ஸ்டார்க் 2/12 [7], மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 1/14 [3], ஜொஷ் ஹேசில்வூட் 0/11 [6], கிளென் மக்ஸ்வெல் 0/9 [3])

போட்டியின் நாயகன்: மிற்செல் ஸ்டார்க்

மூன்றாவது போட்டியானது கெய்ன்ஸில் நாளை மறுதினம் காலை 9.50 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

சம்பியன்ஸ் லீக்:

## நாப்போலியிடம் தோற்ற லிவர்பூல்

சம்பியன்ஸ் லீக் தொடரில், இத்தாலிய சீரி ஏ கழகமான நாப்போலியின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-4 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூல் தோற்றது.

இதேவேளை, இன்னொரு இத்தாலிய



சீரி ஏ கழகமான இன்டர் மிலனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-0 என்ற கோல் கணக்கில் ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச் வென்றது.

இந்நிலையில், பெல்ஜியக் கழகமான கிளப் ப்ரூகேயின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் இன்னொரு ஜேர்மனிய புண்டெலிஸ்கா பயேர் லெவர்குஸன் தோற்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 09 செப்டெம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.